# பொன்னம்பலம் அருணாசலம்

1853-1924

10030

13045

U. V. SWAMINATHAIYAR LIBRARY

கொழும்பு, 1953, செப்டெம்பர் 14-ஆம் திகதி




பொன்னம்பலம் அருணாசலம், 1897

# பொன்னம்பலம் அருணாசலம்

அரசியல் ஞானி—வித்யா விற்பன்னர்

ஜீவிய சரித்திரச் சுருக்கம்

கொழும்பு, 1953, செப்டெம்பர் 14-ஆம் திகதி

சேர் பொன்னம்பலம் அருணசலம் அவர்களின் இந்தச் சீவிய சரித்திரச் சுருக்கம், அவரது பிறந்த தின நூற்றுண்டு நிறைவு விழாவின்போது, சேர் பொன்னம்பலம் அருணசலம் நூற்றுண்டு விழாச் சபையாரால் பிரசுரிக்கப்பட்டது. கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றெட் ஸ்தாபனத்தாரால் அச்சிடப்பெற்றது.

# பொன்னம்பலம் அருணாசலம்

## அரசியல் ஞானி – வித்யா விற்பன்னா

## 1853 – 1924

### சீவிய சரித்திரச் சுருக்கம்

பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் நூற்றாண்டு விழாவை இப்பொழுது கொண்டாடுகின்றோம். இப்பெரியார் ஓர் சிறந்த தேசத்தொண்டரும் தேசாபிமானியுமாவர். ஈழம் இன்றுபெற்ற சுதந்திரத்திற்கு இவர்காலத்தில் அத்திவாரமிட்ட தலைவர்களுள் இவரே கூடிய சேவையாற்றினாரென்றால் மிகையாகாது. தனது சீவியகாலத்தில் வாழ்ந்த தேசப் பெரியார்களின் விசுவாசத்தையும், நன்மதிப்பையும் பெற்ற மாபெருந் தலைவரான பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் வாழ்க்கை, பெரிய இலட்சியங்களைக் கடைப்பிடித்துச் சேவையாற்றும் தொண்டர்கட்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாயமைந்து புத்துயிரளித்து வருகின்றது. கீழைத் தேயங்களிலிருந்தும் மேலைத் தேயங்களிலிருந்தும் இவர் பெற்ற ஒப்பற்ற கல்வியறிவும் பண்பாடும் தனது உயர்குடிப் பிறப்பிற்கேற்ற பெருந்தன்மையையும் பணியாற்றும் சுபாவத்தையும் மென்மேலும் வளரச்செய்தன.

பொன்னம்பலம் அருணாசலம் 1853-ஆம் ஆண்டு, செப்டம்பர் 14-ஆம் தேதி பிறந்தார். இலங்கைச் சட்டசபை ஏறி, தேச சேவையாற்றிப் பெரும் புகழீட்டிய மூன்று சகோதரர்களுள் இளையவர் இவரே. துணிவும் சுவாதீனமான கொள்கையும்வாய்ந்த குமாரசுவாமி அவர்கள் சிறந்த தேச சேவையாற்றி 1906-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இன்று இவருடைய புகழ் அதிகம் துலங்காததற்குக் காரணம் இவருக்குப் பின் இராமநாதனும் அருணாசலமும் ஈட்டிய பெரும் புகழேயாகும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாயில் உள்ள பிரபல குடும்பத்தில் இம்மூன்று தலைவர்களும் பிறந்தனர். அருணா

சலம் அவர்களின் தாய்வழிப்பேரன் குமாரசுவாமி முதலியார். இலங்கையில் முதன் முதலாக 1834-ல் சட்டசபை அமைக்கப் பட்டது. இச்சபையில் அங்கத்தவராகப் பதவிவகித்த முதலாவது தமிழர் குமாரசுவாமி முதலியாராவர். இம் மூன்று சகோதரர்களின் தாய் மாமன், சேர் முத்துக்குமார சுவாமி அவர்கள்.

இலண்டன், பாரிஸ் நகரங்களிலுள்ள வித்தியாமன்றங் களில் ஆயிரத்து எண்ணூற்று அறுபான் ஆண்டுகளில், சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் பெரும் புகழீட்டினர். ஹெளட்டன் பிரபு, பாமேஸ்டன் டிஸ்ரயிலி முதலிய பெருமக்களின் நட்பைப் பெற்றனர். டிஸ்ரயிலி எழுதிக் குறையில் விட்டுச்சென்ற நாவல், 'இலண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இலங்கை வாசி, 'குசினுரா' என்றொரு பாத்திரம் இக்கதையில் வருகிறது. அநேகமாக, இப்பாத்திரம் சேர் முத்துக்குமாரசுவாமியின் தொடர்பையே சித்திரிக்கின்றதெனக் கொள்கிறார்கள். சேர் முத்துக்குமாரசுவாமி, 'லிங்கன் இன்' சட்டக்கல்வி மன்றத் தைச் சேர்ந்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். இலங்கைச் சட்டசபையில், பல வருடங்களாக ஓர் பிரபல அங்கத்த வராகப் பதவி வகித்தவர். 'நைட்' பட்டம் பெற்ற முத லாவது தமிழரும் இவரே. ஆசியாக் கண்டத்தில் கிறிஸ்தவ சமயத்தைச் சாராதவர்களுள் முதல் முதலாக இங்கிலாந்தில் பாரிஸ்டராக்கப்பட்டவரும் இவரே. இவருடைய நண்பர் களுள் ஒருவரான ஹெளட்டன் பிரபு, அருணசலம் அவர்கட்கு இவரைப்பற்றி எழுதிய ஓர் கடிதத்தில், 'கண்ணியமும் பெருமதிப்புமுள்ளவர் என நான் மதிக்கிறேன். இந்தியா வின் சக்கரவர்த்தினியின் கீழைத்தேயப்பிரஜைகளை இங்கி லீஷ் சட்டமன்றத்தில் சேர உரியவராக்குதற்கு ;ஆற்றிய சேவைக் கேற்ற பிரபலத்தை இவர் பெறவில்லை'. இவ்விவா தங்களிலெல்லாம் புறூகாம் பிரபு, சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கட்குப் பேருதவி புரிந்தனர் எனக் ஹெளட்டன் பிரபு கூறியுள்ளார். அப்சேர்வர் ஆசிரியராயிருந்த பெர்கூசன், இத்தலைவர் இறந்தபொழுது, 'திராவிடர் சாதியிலுள்ள 2 கோடி மக்களுள், இவரே தனிப்பெருமையுடன் விளங்கினுர்' என எழுதியிருந்தார். இவருக்கு ஒரே ஒரு புதல்வர். அவர்

தான் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள். உலகப் பிரசித்திபெற்ற மேதையும் கலாவிமர்சகருமாவர். இந்தியா, இலங்கை என்னும் இரு தேசங்களினதும் கலைவளர்ச்சிக்கும் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்கும், இவ்வறிஞர் எழுதிய நூல்கள் பேருதவிபுரிந்து நிற்கின்றன. கீழைத் தேயக்கலைகளை ஆராய்ந்து அவற்றிலுள்ள தத்துவங்களுக்கெல்லாம் வியாக்கியானம் எழுதியிருக்கின்றார் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள். இவருடைய ஆராய்ச்சி நூல்களை மேலைத் தேய அறிஞர்களும் வாசித்துக் கீழைத் தேயக்கலைகளில் பெரும் ஆர்வங்கொள்கின்றனர். கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் 1947-ல் அமெரிக்காவைச் சேர்ந்த பொஸ்டன் என்னுமிடத்தில் காலமானார்.

சேர் முத்துக்குமாரசுவாமியின் கண்காணிப்பிலேயே குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் ஆகிய மூன்று சகோதரர்களும் வளர்ந்தனர். தன் சகோதரர்களைப் போலவே, அருணாசலம் அவர்களும் 'றோயல் அக்கடமியில்' கல்வி கற்கத் தொடங்கினார். றோயல் அக்கடமியே, இப்பொழுது றோயல் கல்லூரியாக இருக்கும் ஸ்தாபனமாகும். இங்கு இவர் இராணி கல்விச்சகாய நிதியைப் பெற்றார். இக் கல்லூரியின் அதிபர், டாக்டர் பாக்குரப் போக், இவரைப் பற்றி எழுதிய நற்சாட்சிப் பத்திரத்தில். 'கல்வி கற்பிக்குந் தொழிலில் எனக்கு நாற்பது வருட அனுபவமுண்டு. அருணாசலத்தைப் போல் சாமர்த்தியமும் விவேகமும்வாய்ந்த வாலிபனை நான் கண்டதேயில்லை. அருணாசலத்தின் ஒழுக்கம் என்றும் மிகத்திருப்திகரமானதாகவே இருந்து வருகிறது. எத்துறையிலும் மேலோங்க வல்ல ஓர் வாலிபனென்றே நான் கருதுகிறேன்' எனக் குறிப்பிட்டிருந்தார். அனுபவ முதிர்ச்சியுள்ள ஓர் பிரபல கல்லூரி அதிபரிடமிருந்து இவ்வித நற்சாட்சிப் பத்திரத்தைப் பெறுவது மிகவும் பாராட்டத்தக்கதே. இவ்வாசிரியரே அக்காலத்தில் கல்வி கற்ற பிரபல மாணக்கர்களாய, சீ. ஏ. லோரன்ஸ், நெல், வில்லியம் குணத்திலக, முத்துக்குமாரசுவாமி, டோறேஸ்ட் முதலியவர்களைப் படிப்பித்திருக்கின்றார். 1870-ல் ஆங்கிலச் சர்வகலாசாலைக் கல்விச் சகாயநிதியைப் பெற்று, அருணாசலம் அவர்கள், கேம்பிரிட்ஜிலுள்ள 'கிறைஸ்ட்' கல்லூரியில் உயர்தரக் கல்வி பெறச்

சென்ருர். அக்காலத்திலிருந்த வித்தியாதிகாரி, சேர் வால்டர் சென்டோல் அவர்களே கிறைஸ்ட் கல்லூரிக்குச் செல்லும்படி இவருக்கு ஆலோசனை கூறினுர். கேம்பிரிட்ஜிலுள்ள வித்தி யாதிகாரிகட்கு, அருணுசலம் அவர்களைப் பற்றி எழுதும் பொழுது, ' விசேஷ தகுதியுள்ள ஓர் கீழைத்தேய இளைஞன். சகல முன்னேற்றங்களையும் அடையக்கூடிய ஆற்றலுடைய வன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

சிறிது காலத்திற்குள்ளேயே, அருணுசலம் அவர்கள் தனது திறமையை விளக்கி, ' பவுண்டேஷன் ' கல்விச்சகாய நிதியைப்பெற்று, புராதன இலக்கியங்களிலும் கணித சாஸ் திரத்திலும், வல்லுநராகிப் பெரும் புகழ் ஈட்டினர். கிறை ஸ்ட் கல்லூரி மாணவர் வரிசையில் சாமர்த்தியமுள்ள கணித சாஸ்திர நிபுணனும் புராதன இலக்கிய அறிஞனும் என அருணுசலம் அவர்களை விவரித்திருந்தார்கள். கேம்பிரிட்ஜ் கல்லூரியில் இவருக்குக் கல்வி பயிற்றிய ஆசிரியர்களுள், திரு. பிளெச்சர் மோல்டன், (பின், ஐஸ்ரிஸ் பிரபு) பேராசிரியர் ரீட், டாக்டர் பெயில்லே, வண. ஸ்கீட் என்பவர்களுமிருந்தனர். இவருடைய நண்பர்களாக, லிட்டில்ற்றன் இருவர், ஜெரால்ட், ஊஸ்ரேஸ்பல்பர், பேராசிரியர்கள் மெயிட் லன்ட், பொக்ஸ்பெல், வண. கன்னிங்காம்—மகாகவி டெனிஸனின் மூத்த புதல்வர் டெனிஸன் பிரபு, அலெக் ஸாண்டர் ஹறிஸ், எட்வேட் காப்பென்டர் முதலியோர் திகழ்ந் தனர். எட்வேட் காப்பென்டர் சீவிய நண்பராக இருந்து அருணுசலம் அவர்கட்குப் பேருதவி புரிந்துவந்தனர். தனது நட்பின் சின்னமாக, அருணுசலம் அவர்கள் இறந்தபின், அவர் எழுதிய கடிதங்களுள் தெரிந்தெடுத்துச் சிலவற்றைத் தொகுத்து ' கிழக்குத்திக்கின் சோதி ', என்ற பெயருள்ள நூலாக அந்நண்பர் வெளியிட்டார்.

அறிஞர்களின் மத்தியில் வாழ்ந்த அருணுசலம் அவர்கள், தமது நேரத்தை உயர்ந்த ஆராய்ச்சிகளில் செலவிடலானுர். கேம்பிரிட்ஜில் கல்வி கற்கும்பொழுது ஓர் குறிப்பிடத்தக்க சம்பவம் நிகழ்ந்தது. யோர்க்கிலுள்ள பிரதான அத்தியட் சகுரு, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை மாணவர்கட்கு இடை யிடையே மதபோதனை நடத்துவதுண்டு. ஒரு நாள் ஆற்றிய போதனையில் இந்திய மதங்களை அவமதித்துப் பேசிவிட்டார்.

அடுத்த நாளே அருணுசலம் அவர்கள், குருவானவருடன் மறுத்து உரையாடத் தொடங்கிவிட்டார். இவர்களுக்கிடையே நடந்த கடிதப் போக்குவரத்து 'ஸ்பெக்டேட்டர்' பத்திரிகையில் 1874-ல் பிரசுரிக்கப்பட்டது. 1875-ல் இவருடைய விருப்பத்திற்கு மாருக, இவருடைய மாமன் சேர் முத்துக் குமாரசுவாமி, சிவில் சர்வீஸ் சோதனை எடுக்கும்படி இவரை வற்புறுத்திஞர். நியாயதுரந்தரராவதே அருணுசலம் அவர்கட்கு விருப்பமாயிருந்தது. ஆனுல் தெய்வசித்தம் வேருயிருந்தது. சிவில் சர்வீஸ் சோதனையில் முதன் முதலாகச் சித்தியடைந்த இலங்கையர் அருணுசலம் அவர்களே.

1875-ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கை திரும்பியதும் கொழும்பிலுள்ள அரசாங்க மாகாண அதிபதி காரியாலயத்தில் அருணுசலம் அவர்கள் நியமிக்கப்பட்டார். பின்பு சில காலம், கண்டிப் பகுதிப் பொலீஸ் நீதிமன்றத்தில் அமர்த்தப்பட்டார். பின்பு இலங்கையில், பல பகுதிகளில் பல நீதிஸ்தல உத்தியோகங்களில் அமர்ந்தார். மட்டக்களப்புப் பகுதியில் டிஸ்திறிக் நீதிபதியாகக் கடமையாற்றியபொழுது அருணுசலம் அவர்கள் சிவில் சர்வீஸ், நான்காம் வகுப்பிலேயே இருந்தார்.

அக்காலத்தில் சேர் ஆதர் கோடன் இலங்கைத் தேசாதிபதியாக இருந்தார். அருணுசலம் அவர்களின் திறமையை அவதானித்த தேசாதிபதி அவர்கள், றிஜிஸ்டார் ஜெனரல் பதவியில் இவரை நியமித்தார். சிவில் சர்வீஸில், அருணுசலம் அவர்களிலும்பார்க்க உயர்ந்த பதவி வகித்த முப்பது அதிகாரிகள் இருப்பவும், அவர்களுக்கு மேலாக அருணுசலம் அவர்களை உயர்த்தியது மிகவும் வியப்பானதோர் காரியமாகும். அருணுசலம் அவர்களின் பதவி உயர்ச்சியை ஆட்சேபித்து சிவில் சர்வீஸில் உள்ள பல அதிகாரிகள் தேசாதிபதிக்கு விண்ணப்பம் செய்தனர். தேசாதிபதி இந்த மறுப்புக்களை எல்லாம் பாராட்டாது, அருணுசலம் அவர்களின் திறமையையே பாராட்டிஞர்.

அருணுசலம் அவர்கள் தமது புதிய பதவியில் அமர்ந்து நிர்வாகத் திறமையுடன் உழைத்து வரலாஞர். அந்த நாட்களில் பிஸ்கால் இலாகாவில் பல ஊழல்களும் கைலஞ்சமும் தாண்டவமாடின. இந்த ஊழல்களை எல்லாம் நீதிபதிகளும்

வழக்கறிஞர்களும்கூட அறிந்திருந்தனர். அருணுசலம் அவர்கள் இவற்றையெல்லாம் அவதானித்தே வந்தார் பிரதம பதிவுக்காரியாலயமும் பிஸ்கால் இலாகாவும் அக்காலத்தில் ஒரே இலாகாவாகவே இருந்தன. ஊழல்களை நீக்கிச் சீர்திருத்தம் செய்யும் நோக்கத்துடன் அருணுசலம் அவர்கள் இந்த இரண்டு இலாகாக்களையும் வெவ்வேறு இலாகாக்களாக மாற்றி அமைக்கும்படி ஆலோசனை கூறினுர். பிரதம பதிவுக்காரியாலயத்திலும் இரு பிரிவுகளை அமைத்தார். ஒன்று, காணிப் பதிவுப்பிரிவு. மற்றது பிறப்பு, மரண, விவாக பதிவுப்பிரிவு. இப்படி தனித்தனியாக வகுத்து அமைக்கும் வேலை மிகவும் சாமார்த்தியமானதொன்ருகும். இந்த நிர்வாக அலுவல்களையெல்லாம் அருணுசலம் அவர்கள் அரசாங்கத்துக்குப் பூரண திருப்தி உண்டாகும் வகையில் ஆற்றினுர். இவைகளை அவதானித்த தேசாதிபதி, சேர் ஆதர் கோடன், உத்தியோக பூர்வமாகவும் தனது பிரத்தியேக முறையிலும் அருணுசலம் அவர்களைப் பாராட்டினுர். ஆபத்தான கட்டத்தில் ஊழல்களுக்கு இரையாகி இருந்த பிரதம பதிவுக்காரியாலத்தைச் சீர்திருத்தி அமைத்த பெருமை அருணுசலம் அவர்களையே சாரும். 1887-ஆம் ஆண்டிற்கு முன்பும் அதன் பின்பும் இந்த இலாகா இருந்த நிலைமைகளை அவ்வாண்டிற் பிரசுரிக்கப்பட்ட நிர்வாக அறிக்கைகள் மூலம் அறியலாம். ‘டைம்ஸ் ஒவ் சிலோன்’ என்னும் பத்திரிகை இதுபற்றி எழுதுகையில் ‘அருணுசலம் அவர்கள் பதவி ஏற்கும் பொழுது பிரதம பதிவுக்காரியாலயத்தில் பல ஊழல்கள் தாண்டவமாடின. உறுதிகள் பதிவு செய்வதென்றுல் எவ்வளவோ கால தாமதமும் அலைக்கழிவும் ஏற்பட்டன. காணிப் பதிவு சம்பந்தமாகவோ கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாகவோ யாதொரு அட்டவணையும் வைத்திருக்கப்படவில்லை. நேர்மையற்ற முறைகள் பல கையாளப்பட்டன. முக்கியமான இடாப்புக்களும் சாதனங்களும் நிலத்திலேயே கவனமின்றி குவிக்கப்பட்டிருந்தன. நேர்மை என்பது அணுவளவேனும் புலப்படவில்லை. நிர்வாகம் இப்படி இருந்த போதிலும் பதிவுச் செலவுகள் இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் கணக்கிடப்பட்டன. இந்தப் பணம் எல்லாம் எங்கே போனதென்பதே தெரியாது. நிலைமைகளைச் சீர்திருத்த ஒரு அதிகாரியாலும்

முடியாமல் போனது. இதற்குக் காரணம் அதிகாரிகட்கு நிர்வாக அறிவு போதாமையே. அருணசலம் அவர்கள் மிகுந்த ஆற்றலும் தளரா ஊக்கமும் உள்ள ஒருவர். காரியாலயத்தில் உள்ள ஒவ்வொரு இலிகிதர்முன்பாகவும் சென்று பொறுமையுடன் அவராற்றும் கடமைகளைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். சகல இலிகிதர்களின் கடமைகளையும் பூரணமாகக் கற்றுக்கொண்ட பின்பு, சீர்திருத்த வேலையை ஆரம்பித்தார். உறுதிகள் பதிவதில் ஏற்பட்ட காலதாமதத்தை உடனே நீக்க முயன்முர். ஒவ்வொரு இலிகிதரும் நேர்மையாகவும் தளரா ஊக்கத்துடனும் தனது கடமையைப் புரிய பயிற்றுவித்தார். மேலதிகமாக உள்ள இலிகிதர்களை மட்டுப் படுத்தினர். உத்தியோக பூர்வமாக ஆற்றும் கடமைகட்குத் தனி வேதனம் பெறுவதை நீக்கினர். சாதனங்கள் பதிந்து வைத்திருக்கும் காரியாலயத்தைச் சீரான முறையில் திருத்தி அமைத்தார். இன்ன இன்ன அலுவலுக்கு இன்ன இன்ன செலவு என வரையறுத்தார். பதிவு இடாப்புகளைச் செப்பமிட்டு வைத்திருக்க விசேஷ உத்தியோகத்தர்களை நியமித்தார். பதிவுச் சாதனங்களைப் பேணி வைத்திருக்க ஓர் புதிய காரியாலயத்தை அங்குரார்ப்பணஞ் செய்தார். அலுவல்கள் செவ்வனே நடைபெற ஓர் புதிய முறையை ஏற்படுத்தினர். மேலதிகமாகப் பெற்ற செலவுப் பணத்தை எடுத்து ஓர் சகாய நிதியை ஆரம்பித்தார். இன்று இந்நிதியில் ஏறக்குறைய 50,000 ரூபா மூலதனமாகத் திரண்டிருக்கின்றது. இந்தச் சகாய நிதி ஏற்படுத்தப்பட்டதினுல் எத்தனையோ இலிகிதர்கள் செட்டிகளிடம் வட்டிக்குப் பணம் பெற்று ஆட்படாமலும், கடனுல் சுயமரியாதையை இழக்காமலும், காப்பாற்றப்பட்டனர். எத்தனையோ விதவைகளும் அநாதைப் பிள்ளைகளும் காப்பாற்றப்பட்டனர். இச்சகாய நிதிச்சபையில் உள்ள ஓர் அங்கத்தவர் இறந்தால் அவருக்கு ஏறக்குறைய ஆயிரம் ரூபா இந்நிதியில் இருந்து வழங்கப்படும். இந் நிதிச்சபையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்ததனுல் சிக்கனமாக வாழ்க்கை நடத்தப் பழகிக் கொண்டனர். இந்த நிதியின் உதவியைக் கொண்டு அரசாங்க இலிகிதர்களுக்கென ஒரு வாசிகசாலையும் ஒரு நூல் நிலையமும் ஸ்தாபிக்கப்பட்டன.

புள்ளி விபரங்கள் கணிக்கும் துறையில் பிரசித்திபெற்ற ஓர் அமெரிக்க அதிகாரி, பிரெடரிக் கவ்மன், இலங்கைத் தேசாதிபதிக்கு எழுதிய ஓர் கடிதத்தில் ' 1898-ஆம் ஆண்டிற்குரிய இலங்கை உயிர்ப் புள்ளி விபர அறிக்கை, என்னும் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டேன். இவ்வறிக்கையை ஆவலுடன் படித்தேன். இதுபோல மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து எழுதிய ஓர் அறிக்கையை நான் பார்த்ததேயில்லை. அநேகமாக சகல பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளைப் பற்றியும் நான் அறிந்திருக்கின்றேன். இவ்வளவு நுட்பமாகவும் திட்பமாகவும் எழுதப்பட்ட ஓர் அறிக்கையை அமெரிக்காவிலும் நான் கண்டதில்லை' எனக் குறிப்பிட்டார்.

அருணாசலம் அவர்கள் பிறப்பு, இறப்புப்பதிவில் ஓர் புதிய முறையை இலங்கையில் கையாண்டார். இந்த முறை கீழைத் தேசங்களுக்கு புதிதாக இருந்தது. இலங்கையில் மரண விகிதம் தீவிரமாக அதிகரித்து வந்ததை 1895-ல் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டினார். சுகாதார வசதிகள் குன்றிய சேரிகளினாலேயே நோய் பரவுகின்றதென்பதை விளக்கினார். சாக்கடை நீர் ஊருக்குள் தங்காது வெளியே அப்புறப்படுத்துவதற்கு ஆவன முறைப்படி செய்யவேண்டுமென்றும் குடியிருப்பு வீடுகள் சுகாதார வசதிகளுடன் அமைக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறினார். இலங்கைத் தேசாதிபதி அவற்றை ஏற்று நடவடிக்கை எடுக்கும் முகமாக இங்கிலாந்தில் இருந்து மான்சேக் என்னும் நிபுணரை வரவழைத்தார். அருணாசலம் அவர்களின் நிர்வாகத்தில் மிகத்திறமையுடன் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களும் அரிய தகவல்களும், பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் தேசம் முன்னேற என்ன என்ன ஆக்க வேலைகள் செய்யவேண்டுமென்பதற்கும் குற்றங்களைத் தடுக்கவும் நோய் பரவாதிருக்கவும் என்ன என்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமென்பதற்கும் அரசாங்கத்துக்குப் பேருதவி புரிந்தன.

1901-ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பு வேலையை அப்பொழுது ஆண்ட இலங்கைத் தேசாதிபதி, சேர் வெஸ்ட் றிட்ஜேவே, அருணாசலம் அவர்களிடம் ஒப்படைத்தார். மிகவும்

பிரயாசப்பட்டு முன் என்றும் நடந்திராத சிறந்த முறையில் இந்த ஜனசங்கியை நிறைவேறியது. தேசாதிபதியும் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியும் இவ்வரிய வேலையை மிகவும் பாராட்டினர். குடிசன கணக்கெடுப்பு நடைபெற்ற ஒரு வாரத்திற்குள்ளேயே சுருக்கமான புள்ளி விபரங்கள் பிரசுரிக்கப்பட்டன. இதற்குமுன் நடைபெற்ற ஜனசங்கியைகளில் எல்லாம், குறைந்தது மூன்று மாதத்தின் பின்னரேயே புள்ளி விபரங்கள் பிரசுரிக்கப்பட்டு வந்தன. புள்ளி விபரங்களை சேகரித்து இலங்கைக்கு ஓர் குடிசன சூசிகையை முதல் முதல் அளித்த அதிகாரி அருணுசலம் அவர்களே. 1901-ஆம் ஆண்டு குடிசன அறிக்கைபற்றி 'சிலோன் ஒப்சேவர்' என்னும் பத்திரிகை பின்வருமாறு எழுதியது: 'திறமைவாய்ந்த சிவில் சர்வீஸ் அதிகாரியாக திரு. லயனல் லீ அவர்களையே தேசம் மதித்து வந்தது. ஆனுல் அவர் 1891-ல் எழுதிய குடிசன மதிப்பு அறிக்கையையும் 1901-ஆம் ஆண்டில் அருணுசலம் அவர்கள் எழுதிய குடிசன மதிப்பு அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது எவ்வளவு வித்தியாசங்கள் தென்படுகின்றன. அருணுசலம் அவர்கள் எழுதிய அறிக்கையில் வாசிக்க ஆர்வந்தரும் பல அரிய தகவல்கள் பொதிந்திருக்கின்றன். இந்த அறிக்கையை வாசிக்கின்றபொழுது பல அழகுகள் புலப்படுகின்றன. பல்வேறு வகைப்பட்ட தகவல்களைத் தொகுத்து கிரகிக்கத் தக்க முறையில் எழுதும் வன்மை, ஆராய்ச்சி ஞானம், ஒவ்வொரு பக்கத்திலும் துலங்கிக்கொண்டே இருக்கின்றன. வாசிக்க இரம்மியமான இவ்வறிக்கை மிகவும் உபயோகமான ஒரு நூலுமாகும்'. அருணுசலம் அவர்களின் அறிக்கையைப்பற்றி இலண்டனில் உள்ள 'டைம்ஸ்' பத்திரிகை பின்வருமாறு எழுதியது: 'இலங்கை வாழ் மக்களின் சரித்திரம், சமயம், பாஷை, இலக்கியம், முதலியன சம்பந்தமான வரலாறுகளை எடுத்துக் கூறும் அதிகார பூர்வமான ஓர் நூலாகும்'. இவர்காலத்தில் பிரசித்திபெற்ற பத்திரிகையான 'சிலோன் மோர்னிங் லீடர்' என்ற இதழின் ஆசிரியர், ஆமன் டீ சௌசா அவர்கள், 'இலங்கையின் பொருளாதார சமுதாய நிலைமைகளையும் சாதிப் பாகுபாடுகளையும் தெளிவாக ஆராய்ந்து காட்டும் ஓர் அரிய நூல். ஓர் அரசாங்க அறிக்கையில் பொதுவாகக் கட்டுரை வன்மையையோ, பாஷை அழகையோ எதிர் பார்க்க முடியாது. இதனுல் இப்படியான

பிரசுரங்கள் பொதுஜனங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை. ஆனால் சேர் பீ. அருணாசலம் அவர்கள் எழுதிய இவ்வறிக்கையில் பாஷை அழகுக்குப் பேர்போன அடிசன் அவர்களின் நடை அழகு துலங்குகின்றது. மாக்கொலே ஆசிரியரின் கெம்பீரம் மிளிர்கின்றது. சரித்திர ஆசிரியர், மொம்செனின் நுண்ணிய ஆராய்ச்சி புலப்படுகின்றது' என விபரித்தார்.

பிரதம பதிவுக்காரியாலய இலாகாவில் அருணாசலம் அவர்கள் ஏற்படுத்திய சீர்திருத்தங்களை நடைமுறையில் கொண்டு வருவதற்கு பல நிர்வாக மாற்றங்களும் சட்டங்களும் உருவாக்கப்பட வேண்டியிருந்தன. 1895-ல் பிறப்புப் பதிவு, இறப்புப்பதிவு, விவாகப்பதிவு என்பனவற்றிற்கும் நொத்தாரிசு சட்டத்திற்கும் முதலாம், இரண்டாம் இலக்கமுள்ள சட்டங்களை அருணாசலம் அவர்களே ஏற்படுத்தினார். இவ்விரு சட்டங்களையும் சட்டசபைக்குக் கொண்டு வந்து உருவாக்கும் வேலை அட்டோணி ஜெனரலினுடையதாக இருப்பவும் அரசாங்கம் அருணாசலம் அவர்களிடமே அப்பொறுப்பை ஒப்படைத்தது. காணிகளுக்கும் காணிகளைப் பாதிக்கும் உறுதிகளுக்கும் உரிமை பதிவு செய்யும் விஷயம்பற்றி ஆராயும் பொருட்டு அக்காலத்தில் பிரதம நீதிபதி தலைமையில் ஓர் விசாரணைச்சபை கூடியது; இச்சபை சமர்ப்பித்த அறிக்கையில் ' இது விஷயமாக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை உருவாக்குவதற்கு பிரதம பதிவுகார அதிகாரி அருணாசலம் அவர்கள் பொது சனங்கட்கு ஆற்றிய சேவையை இங்கு பாராட்டுகின்றோம்' எனக் குறிக்கப்பட்டிருந்தது.

அருணாசலம் அவர்கள், உத்தியோகத்தில் இருந்த பொழுது அநேக வருடங்களை நீதிபதியாக இருந்து கழித்தனர். அப்பொழுது இலங்கையில் ஆங்காங்கு கூடிய நீதி விசாரணைச்சபைகளில் பதவிவகித்த அங்கத்தவர்கள் எல்லோரும் அருணாசலம் அவர்களின் சேவையை மிகவும் பாராட்டினார்கள். அப்பொழுது பிரதி பிரதம நீதிபதியாகக் கடமையாற்றிய மொன்கிரியவ் அவர்கள் ஒரு முறை அருணாசலம் அவர்கள் செய்த ஒரு பிரசங்கத்துக்கு தலைமை வகித்தார். தமது முடிவுரையில் ' அருணாசலம் அவர்கள் ஓர் பிரபல அறிஞன். புராதன ஆங்கில இலக்கியங்களிலும் கீழைத் தேய இலக்கியங்

களிலும் இவருக்கு மிகுந்த பாண்டித்தியம் உண்டு. ஆங்கிலப் பேச்சுவன்மையும் இலக்கிய ஆராய்ச்சியும் அவருடன் பிறந்தனவே எனலாம். இவர் எக்கருமத்தை எடுத்தாலும் இலக்கிய ஆராய்ச்சியாய் இருந்தாலும்சரி சட்டப் பயிற்சியாய் இருந்தாலும்சரி உத்தியோக அலுவலாய் இருந்தாலும்சரி கண்ணும் கருத்துமாய் இருந்து மிக நுட்பமாகக் கடமையாற்றும் சாமர்த்தியம் வாய்ந்தவர்' எனத் தலைவர் இவரைப் புகழ்ந்தனர். இவருடைய நீதித்தீர்ப்பை பிரபல வழக்காகிய, 'ஆதிப்பொல சாஸன' வழக்கு மூலம் அறியலாம். இவ் வழக்கில் மிக நுணுக்கமான சட்டங்களை எல்லாம் இவர் ஆராயவேண்டியிருந்தது. இவ்வாராய்ச்சியின்பலனுக இலங்கை 'சிவில் சட்டச் சுருக்கம்' என்ற நூலை எழுதி தனது மாமனுரின் நண்பர் லாட் ஹௌட்டனது மகன் குருவின் மார்க்குவிஸ் ஞாபக சின்னமாக வெளியிட்டார். இச்சட்டநூல் ஜெர்மானிய சிவில் சட்டமுறையையும் இலங்கைக்குப் பொருந்தக் கூடிய ரேமன்-ஒல்லாந்த சிவில் சட்டமுறைகளையும் பின்பற்றி ஆராய்ந்து எழுதப்பட்ட ஓர் அரிய நூலாகும். சிவில் சட்டங்களையெல்லாம் கிரமப்படுத்தி, பதம் பதமாகப் பிரித்து, தர்க்க ரீதியாக ஒழுங்குசெய்து, அந்தந்தப் பதத்திற்கு அந்தந்தச் சட்டங்களென வகுத்து அவைகட்கு அதிகார பூர்வமான மேற்கோள்களும் வகுத்து அமைப்பதே அருணுசலம் அவர்களின் நோக்கமாயிருந்தது. இதில் முதலாம் பாகத்தையே எழுத முடிந்தது. இதுவே ஆசிரியரின் சாமர்த்தியத்தையும், தளரா ஊக்கத்தையும், ஆழ்ந்த அறிவையும் எடுத்துக்காட்டும். பிரசித்திபெற்ற அத்தியட்சகர் ஹல்ஸ்பரிப் பிரபுவும், இலங்கைப் பிரதம நீதிபதி, சேர் விவின்பீல்ட் பொன்ஸர் அவர்களும் இவர் எழுதிய இந்த அரிய நூலைப் பாராட்டினுர்கள். இங்கிலாந்தில் பிரசுரமான சட்ட சஞ்சிகையிலும் சட்டப்பத்திரிகையிலும் மதிப்புரைகள் எழுதப்பட்டன.

1913-ல் அருணுசலம் அவர்கள், சிவில் சர்வீஸ் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறினுர். அதன் பிறகுதான் அரசியல் துறையில் அவர் கால்வைத்ததாக பொதுவாகப் பலர் கருதுகின்றனர். இது தவறு. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி கற்றபொழுதே அரசியல் கல்வியில் ஈடுபடலானுர்.

உத்தியோகத்திலிருந்தபொழுதும் தேசத்தின் அரசியல் முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து பலவகையில் தொண்டாற்றியிருக்கிருர்.

1919-ல் இலங்கைத் தேசீய காங்கிரஸ் முதல் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குத் தலைமைபூண்ட அருணுசலம் அவர்கள் தமது பேருரையில் 'கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி கற்கும் பொழுது நான் கண்ட கனவைத்தான் இன்று இலங்கைத் தேசீய காங்கிரசாக நனவில் காண்கின்றேன். கிறைஸ்ட் கல்லூரியில் கல்வி கற்ற நாட்களை என்ஞல் ஒரு காலமும் மறக்க்முடியாது' எனக் குறிப்பிட்டார். என்றுமே ஞாபகத்தில் இருக்கும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை நாட்களில், பேரறிவும் நேரிய இலட்சியமும்வாய்ந்த பேராசிரியர்கள் மத்தியில் மாணவர்களிடம் நட்புப்பூண்டு அருணுசலம் அவர்கள் விளங்கினுர். மில்டன், டார்வின் முதலிய சைதன்ய புருஷர்களின் பண்பாடும் கலாசாரமும் ஒளிவிடும் சர்வகலாசாலையில் கல்வி கற்ற இவர், சேர் ஜோன் சீலி போன்ற அரசியல் ஞானிகளுடனெல்லாம் நட்புப் பூண்டார். இக்காலத்தில் தான் மாஜினி என்ற மாபெரும் அரசியல்வாதி, ஐரோப்பாவில், ஓர் நவ இத்தாலியைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தார். மாணவராயிருந்த அருணுசலத்தின் சிந்தனை இந்தியாவிலும் இலங்கையிலும் ஓர் மறுமலர்ச்சி உண்டாகவேண்டுமெனக் கனுக்கண்டது. அப்பொழுது அருணுசலம் அவர்களுடன் இரு இந்திய வாலிபர்கள் கல்வி கற்றனர். ஒருவர், சையத் முகமத்; மற்றவர், ஆனந்த மோகன் போஸ். சையத் முகமத் பின்பு உயர்தர நீதிமன்றத்தில் நீதியரசராஞர். ஆனந்த மோகன் போஸ் இங்கிலாந்தில் இந்திய மகாநாடு ஒன்றை ஆரம்பித்தார். அதுவே காலகதியில் இந்திய தேசீய காங்கிரசாக உருப்பெற்றது.

அருணுசலம் அவர்கள் சிவில் சர்வீஸில் அதிகாரியாக இருந்த காலத்தில், வில்லியம் டிக்பி என்ற ஆங்கிலேயருடன் அன்னியோன்யமாகப் பழகலானுர். நேர்மையும் நீதியும் நிலவவேண்டுமென்ற இலட்சியத்தையே அவ்வாங்கிலேயரும் கடைப்பிடித்து வாழ்ந்தவர். இவரே சேர் ரிச்சாட் மோகனுடைய வாழ்க்கை வரலாற்றினை எழுதிவைத்தவர். இதனுல் இலங்கை இன்றும் இவரை ஞாபகத்தில் வைத்திருக்கின்றது.

இலங்கைத் தேசிய மகாநாட்டில் அருணுசலம் அவர்கள் முதலாவது தலைவராயிருந்தபொழுது தமது தலைமைப் பேருரையில், இந்த ஆங்கிலேயருக்கு நன்றி செலுத்தினுர். இப்பெரிய ஆங்கிலேய மகானுடன் அருணுசலம் அவர்கள் பலப்பல அரசியல் விஷயங்களை ஆராய்ந்து விவாதிப்பதுண்டு. இவ்வாராய்ச்சிகளின் பலனுகவே, 'சுதந்திரம் உதயமாக பண்பட்ட ஓர் கிழக்குக் குடியேற்ற நாடு' என்னும் சிறுவெளியீடு பிரசுரமானது. இவ்வெளியீட்டை இவ்வாங்கில மகானே எழுதி 1877-ஆம் ஆண்டு, ஜனவரியில் 'கல்கத்தா ரிவியூ' என்னும் சஞ்சிகையில் மலரச் செய்தார். மக்களின் பொறுப்புள்ள ஒரு அரசாங்கத்தை இலங்கையில் நிறுவவேண்டுமென இச்சிறு வெளியீடு தக்க நியாயங்களுடனும் எடுத்துக் காட்டுக்களுடனும் வற்புறுத்தியது. அப்பொழுதிருந்த அரசாங்கமோ இலங்கை மக்களோ இவ்வெளியீடு கொண்ட இலட்சியத்தைப் பொருட் படுத்தவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்கநாதம் போலானது. 1904-ல் இவ்வெளியீட்டிலுள்ள உண்மைகளைச் சிறிது அறியத் தொடங்கினர். அருணுசலம் அவர்களின் முதலாவது புதல்வன் பத்மநாபா இவ்வெளியீட்டை மறுதரம் பிரசுரஞ்செய்தார். இக்காலத்தில் அருணுசலம் அவர்களோ ஆங்கிலேய எழுத்தாளர் டிக்பி அவர்களோ தங்கள் அரசியல் சீர்திருத்த இலட்சியத்துக்காகப் போராட முடியாமல் போனது. அரசாங்க அதிகாரியாயிருந்த அருணுசலமோ எத்தனையோ கட்டுப்பாடுகட்கு அடங்கி நடக்கவேண்டியவரானுர். 'அப்சேவர்' பத்திரிகையில் எழுத்தாளராக நியமிக்கப்பட்ட, டிக்பி பத்திரிகையின் தலைமை ஆசிரியரும் சொந்தக்காரருமான ஏ. எம். பெர்கூசன் அவர்களின் சொற்படி நடக்கவேண்டியவரானுர். அரசியல் சீர்திருத்தத்தைத் துரிதப்படுத்த விரும்பவில்லை. மனவேற்றுமையுடன் டிக்பி அவர்கள் இலங்கையைவிட்டு சென்னை 'டைம்ஸ்' பத்திரிகையில் பதவியேற்ருர். இந்தியாவில் வந்து தன்னுடன் உழைக்கும்படி அருணுசலத்தை வேண்டிக் கொண்டார். 1878-ல் டிக்பி, அருணுசலத்திற்குப் பின்வருமாறு எழுதினுர். 'நீங்கள் இந்தியாவில் இருப்பதை நான் மிகவும் விரும்புகிறேன். விசேஷமானதோர் இலட்சியத்தை நிலைநாட்ட உங்கள் மனம் விரும்புவதை நான் அறிவேன். உங்கள் விவேகத்தையும்

பண்புபெற்ற சிந்தனையையும் தாராளமான குணங்களையும் பிரயோகிப்பதற்கு இப்பொழுது அமர்ந்திருக்கும் ஸ்தானம் பொருத்தமானதன்று. உங்களைச் சூழ்ந்திருக்கும் இடையூறுகளையும், தடைகளையும் வென்று, இப்பொழுது நீங்கள் மேற்கொண்ட புற நீங்கலான வாழ்வை மாற்றினாலொழிய இலட்சியத்தில் வெற்றிகாண முடியாது. தங்களைப்போல் ஒரு தனி மனிதனை இங்கு காணமுடியாமலிருக்கிறது'.

இந்தியாவின் அபிவிருத்திக்கான விஷயங்களில் அருணாசலம் அவர்கள் காட்டிய கரிசினையை ஈண்டு எடுத்துரைத்தல் தகும். 1878-ல் இந்தியாவில் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சநிவாரண முயற்சிகளில், டிக்பி. தனது சேவையை ஆரம்பித்தார். இதற்கெல்லாம் அருணாசலம் உதவிபுரிந்தார். இந்திய மகாஜனங்களின் சேமலாபங்களைக் கவனியாது அசட்டையாயிருந்த இந்திய வைசிராய் லிற்றன் பிரபுவின் கொள்கையைக்கண்டு மனம் மடிந்தார். இது பற்றித் தனது நண்பன், எட்வேட் காப்பன்டருக்கு பின்வருமாறு எழுதினார்: 'இந்தியா தேசத்திலும் இந்தியாவிற்கு வெளியேயும், ஆங்கிலேயர் மகாஜனங்கட்குச் செய்துவரும் அட்டூழியங்களைக் கண்ணாரக் கண்டும் எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவியாதிருப்பது முடியாத காரியம். ஆங்கிலேய ஆட்சிக்கு ஜயகோஷஞ் சொல்லிக்கொண்டு இருப்பதை எப்போதும் அவர்கள் எதிர்பார்க்க முடியுமா?' அருணாசலம் உள்ளத்தில் புரட்சி வேகம் அதிகரிக்க ஆரம்பித்தது. இத்தருணத்தில் தனது உணர்ச்சி வேகத்தை பின்வருமாறு சித்திரித்தார்: 'பூனா போன்ற ஓர் இடத்தில் தங்கி, சமுதாய அரசியல் இயக்கமொன்றை ஆரம்பித்தல் உத்தமமென்று நான் சில வேளை நினைப்பதுண்டு. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எவ்வளவு விசுவாசமாயிருந்து உழைத்த போதிலும் அரசாங்கம் என்னைத் துன்புறுத்துமென்றே நினைக்கின்றேன்'. 1898-ல் இந்தியத் தேசபக்தர் திலகர் மேற்கொண்ட முயற்சிகட்கெல்லாம் அனுதாபங் காட்டினார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைப்பற்றி தனது நண்பன் காப்பென்டருக்குப் பின்வரும் வார்த்தைகளில் தன் உள்ளத்தைத் தெரிவித்தார்: 'நாட்டை ஆளும் கலை இந்தியாவில் அற்றுப்போனது. இந்திய அரசாங்கம் எல்லைப்

புறங்களில் உபயோகமின்றித் தொடுத்த போர்களில், பணத்தை இறைத்தது. இவ்வித வீண் செலவுகளின் பயனுகக் கடும்வரி விதித்தது. நிர்வாகம் அபரிமிதமான செலவை உண்டாக்கவே, பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் அவதிப்படும் ஏழை மக்கட்கு கஷ்ட வேளையிலும் அனுதாபம் காட்டாது கொடுமை இழைக்கின்றது. அதுமட்டுமோ, திலகர் போன்ற தேச பக்தர்களை கொடுமையாக நடத்துவதும், அரசாங்க அதிகாரிகளின் செயல்களைக்கண்டு மக்கள் நியாயமான முறையில் நேர்மையாகக் கூறும் அபிப்பிராயங்களைத் தடை செய்வதும் எதைக் குறிக்கின்றது ? அரசாங்கம் தன்னுல் கூடியவரையில்முயன்று மக்கள் வைத்திருக்கும் இராஜவிஸ்வாசத்தை அழிக்கச் செய்யுமென்பதையே அது குறிக்கும். இதனுல் நாளடைவில் பிரிட்டிஷ் ஆட்சி வீழ்ச்சியடையும் '.

குடியேற்ற நாட்டுக் காரியதரிசி, றிப்பன் பிரபுவைச் சந்தித்து இலங்கையில் உள்நாட்டு நிர்வாகத்தில் சுதந்திரம் அளிக்கத் தூண்டும்படி தனது நண்பர் டிக்பிக்கு அருணுசலம் 1893, அக்டோபர் 25-ஆம் தேதி ஒரு கடிதத்தில் எழுதினுர். றிப்பன் பிரபுவை டிக்பிக்கு நன்ருகத் தெரியும். அக்கடிதம் பின்வருமாறு :—

கிழக்கு நாடுகளில் ஆங்கிலேய ஆட்சி ஒருமுகமாக இருந்து எல்லாக்காரியங்களையும் நிர்வகிப்பதனுல் உள்நாட்டு மக்கட்குத் தங்கள் அலுவல்களை நிர்வகிக்கத் தருணம் வாய்க்காது போனதைப் பற்றிப் பலமுறை சிந்தித்துள்ளேன். மக்கள் தங்கள் அலுவல்களை நிர்வகிக்கத் தருணம் வாய்க்காததனுல், தங்கள் பொறுப்புக்களை நடத்தும் இயல்பான சுதந்திர வல்லபத்தை இழந்துவிட்டனர். சாமர்த்தியமற்ற குழந்தைகளைப்போல் மக்கள் உற்சாகமற்றனர். ஆங்கிலேய அதிகாரிகள் நாட்டு மக்கட்குச் செய்யவேண்டிய முக்கிய கருமங்களை அசட்டைசெய்ததனுல் தகுதியற்ற தலைமைக்காரர் கையில் ஒப்படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

' இந்தியாவில் உள்நாட்டு நிர்வாகப் பொறுப்பை, நாட்டு மக்களிடம் கொடுக்க றிப்பன் பிரபு நடவடிக்கை எடுத்தார். இந்த வகையிலேயே இலங்கை நிர்வாகச் சீர்திருத்தமும் அமைந்திருக்கிறது. ஆங்கிலேய அதிகாரிகள் ஏகாதிபத்திய

முறையிலேயே ஊறிக்கிடப்பதனுல், இவ்வகையான சீர்திருத் தங்களை ஏற்கமுன் வரமாட்டார்கள். இப்படியான சீர்திருத்த வேலைகளைக் கையாளவும் ஒரு தருணமளிக்கமாட்டார்கள். இது விஷயமாக முறைக்கு முறை நியமனம் பெறும் தேசாதிபதிகளுடன் விவாதித்து விளக்கியிருக்கிறேன்.

‘ தங்கள் பொறுப்புகளை மக்கள் தாங்களே ஏற்று நடத்த வேண்டும். அவர்கள் பிழை படினும், இந்த விஷயத்தில் ஒரு தருணம் கொடுக்கவேண்டும். தருணம் அளிப்பின் அபரிமிதமாகப் பெருகும் நிர்வாகச் செலவு குறையும். மக்களில் ஊக்கமும் பொறுப்பு வல்லமையும் பிறக்கும். சூதாட்டத்திலும் வழக்குத் தொடுத்தலிலும் வீணே பிரயோகிக்கும் தங்கள் சக்தியை நாட்டை வளம்படுத்தப் பிரயோகிக்க முன் வருவார்கள்.

‘ ஆங்கிலேயர் தங்கள் நாட்டில் போற்றத்தக்க உள் நாட்டு நிர்வாகத்தை மக்களைக்கொண்டு அமைத்துக் கொண்ட பொழுதும் இங்கே ஏன் அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை ? ஆங்கிலேயர் வருமுன் கிராமங்களின் நிர்வாகம் எங்கள் நாட்டில், கிராம மக்களின் கையிலல்லவா இருந்தது. அவர்கள் வந்தல்லவா அதனை நிர்மூலமாக்கினர். அதற்குக் காரணமென்ன ? அதிகார மோகமும் அந்நிய தேச மக்களில் வைத்த வெறுப்புமே. அன்றியும், ஆங்கிலேயர் கிழக்கு நாடுகட்கு அதிகாரஞ்செலுத்த வரும்பொழுது, சுதந்திர ஆட்சி அனுபவம் இல்லாத வெறும் வாலிபர்களாகவே வந்தனர் ’.

நண்பர் டிக்பி அருணுசலம் அவர்கட்கு ஊக்கமும் உதவியும் அளித்துவந்தார். 1901-ல் டிக்பி பின்வருமாறு அருணுசலம் அவர்கட்கு எழுதினுர் : ‘ ஆயிரத்து எண்ணூற்று எழுபான் வருடங்களில் நான் இலங்கையிலிருந்தபொழுது, நாங்கள் வாலிபர்களாயிருந்தோம். அப்பொழுது நாங்கள் கண்ட கனவுகள் உங்கட்கு ஞாபகமிருக்கலாம். அந்தக் காலத்தில் ஊக்கம் மிகுந்திருந்தோம். அதன்பிறகு ஒரு வித மாற்றத்தையும் நான் உணரவில்லை. உள்ளம் விருத்தியடையவே எங்கள் நோக்கமும் விரிவடைந்தது. உத்தியோகத்தினின்றும் நீங்கள் இளைப்பாறவேண்டும். வாலிப வயதில் நாங்கள் கண்ட கனவுகளை, முதிர்ச்சிபெற்ற இந்நாட்களில் ஏன் நனவாக்க

முடியாது. இதைவிட வேறு இலட்சியம் என் மனதில் இல்லை. தோழரே! உம்முடன் நின்று இலட்சியத்துக்காகப் போராடத் தயாராயிருக்கிறேன்'.

இவ்வித உற்சாகம் உந்தவே, அருணாசலம் அரசியல் சீர்திருத்த முன்னணியில் போராடத்தொடங்கினார். 'இலங்கை அப்சேவரின்' அதிபர் திரு. ஏ. எம். எப். பெர்கூசன் வயது முதிர்ந்து இவ்வுலகைவிட்டு நீங்கவே, ஜோன் பெர்கூசன் நிர்வாகத்தை ஏற்கத்தொடங்கினார். ஜோன், காலத்திற் கேற்ற கொள்கைகளை ஆதரிப்பவராயிருந்ததினால், அருணாசலம் அவர்களின் முயற்சிகட்கு ஆதரவு கொடுக்கலானார். 1902, ஜூன்ஆரம்பத்தில், அருணாசலம் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக பெர்கூசனுடன் கடிதப் போக்குவரத்து வைக்கலானார். இதன் பயனாக 1902, ஜூன் 7-ஆம் தேதி அருணாசலம் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்று 'அப்சேவரில்' பிரசுரமானது. 'சீர்திருத்தம்' என்ற புனைபெயருடன் எழுதப்பட்ட இக்கடிதத்தில் அருணாசலம் அவர்கள், இலங்கை அரசியல் சீர்திருத்தத்திற்காக 'அப்சேவர்' ஆசிரியரை முயற்சியெடுக்கும்படியும், ஏழாவது எட்வேட் மன்னரின் முடிசூட்டுவிழாப் பரிசாக இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் பெற ஆசிரியர் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டுமென்றும் அக்கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்தது. 'அப்சேவர்' ஆசிரியர் இதனைப் பிரசுரித்துப் பின்வரும் குறிப்பையும் அதன்கீழ்ச் சேர்த்தார்: 'இக்கடிதத்தை எழுதியவர், செல்வாக்கும் விவேகமும் பண்பாடுமுள்ள மேதை. இலங்கை மக்கள் இவரை ஓர் தலைவராகவே மதிக்கின்றனர்'. இக்கடிதத்தை ஆதரித்து ஆசிரியர் பெர்கூசன் திறமைவாய்ந்த ஆசிரிய வசனமும் 'அப்சேவரில்' எழுதியிருந்தார். 1902, ஜூன் 14-ல் பின்பும் அருணாசலம் அவர்கள், அரசியல் சீர்திருத்த விஷயமாகப் பலபல தக்க காரணங்கள் காட்டி விரிவானதோர் கடிதம் எழுதினார். இக்கடிதமும் ஜனங்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பியதாகக் காணவில்லை.

அருணாசலம் மேற்கொண்ட அரசியல் சீர்திருத்த அலுவல்களையெல்லாம் அரசாங்கம் மறைமுகமாகக் கண்காணித்தே வந்தது. இவ்வித அலுவல்களில் ஈடுபடுவது மனவிரோ

தத்தைக் கொண்டுவருமென்பதை அரசாங்கம் மறைமுகமாக அருணுசலம் அவர்கட்கு விளக்கி வந்தது. இவற்றைக்கண்டு அருணுசலம் அவர்கள் மனச்சோர்வடையவில்லை. ஆனுல் தண்டனை சீக்கிரம் வந்தது. கொழும்பிலிருந்து குருநாக்கலுக்கு நீதிபதியாக மாற்றப்பட்டார். 1913-ஆம் ஆண்டில் அரசாங்க சேவையினின்றும் அருணுசலம் இளைப்பாறினுர். அரசாங்க சேவையில் இருந்தபொழுது அவர் காட்டிய ஆற்றலை அளவிடமுடியாது. அவர் ஈட்டிய வெற்றிகளை இன்னெருவர் அரசாங்க அதிகாரி பெற்றதும் இல்லை. அவருடைய உத்தியோகவாழ்க்கை இலங்கையில் எல்லோருக்கும் என்றுமே பெருமையை ஈட்டும். முப்பத்தெட்டு வருஷங்களாக அரசாங்க சேவையில் அமர்ந்து மிகத்திறமையுடன் ஆற்றிய சேவைக்கு ஓர் கைம்மாருக ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பக்கிங்காம் அரண்மனையில் அவருக்கு 'நைட்' பட்டத்தை வழங்கினுர். இப்பட்டத்தை இப்பெரியாருக்குவழங்க இலங்கையர் ஒருவரும் ஆலோசனை கூறவில்லை. குடியேற்ற நாட்டுக் காரியாலயத்திலுள்ள ஆங்கிலேய அதிகாரிகளே இவருடைய ஆற்றலையும் இவரது சேவையையும் கருதி இப்பட்டத்தைப் வழங்கத் தீர்மானித்தனர். பொதுசன சேவையிலுள்ள சகல சமூகத்தினருமே ஏகமனதாக இப்பெரியார் இப்பட்டம் பெற்றதையிட்டுத் திருப்தியடைந்தனர். பகிரங்க வரவேற்புகள் இலங்கையின் சகல பாகங்களிலும் அளிக்கப்பட்டன. இவ்வரவேற்புக் கொண்டாட்டங்களில் பல தலைவர்களும் சகல சமூகங்களிலுள்ள பிரமுகர்களும் கலந்து 'நைட்' பட்டம்பெற்ற தேசபக்தருக்குப் புகழ்மாரி சொரிந்தனர். அரசாங்கசேவையில் தீவிரமாக உழைத்து, தொண்டாற்றிய இப்பெரியார் தனது பிற்காலத்தை அமைதியான வாழ்விலும், அவர் எப்பொழுதும் விரும்பிக் கற்கும் தத்துவ ஞான ஆராய்ச்சியிலும் கழித்திருக்கலாம். ஆனுல் அவர் தனது பிற்கால வாழ்க்கையைத் தேசசேவையிலேயே செலவழித்தார். அரசாங்கசேவைக் கட்டுப்பாடுகளினின்றும் விடுதலை பெற்ற இத்தேசபக்தர் தெய்வீகமாகப் பெற்ற ஒப்பற்ற தன் சக்திகளையெல்லாம் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலானுர். தனது பிற்கால வாழ்வில், சிவில் சர்வீஸில் இருந்து ஆற்றிய சேவையிலும் பார்க்க மிக முக்கியமான ஓர் சேவையைத் தொடங்கினுர். சமூக அபிவிருத்தி வேலைகளையும்



சேர் பொன்னம்பலம் அருணாசலம்



சேர் பொன்னம்பலம் அருணுசலம்

தர்மஸ்தாபன ஒழுங்குகளையும் தொழிற் சங்கஸ்தாபன அலுவல்களையும் நகரசபை ஸ்தாபன அமைப்புகளையும் விரிவாக ஆராய்ந்து கற்றுக் கொள்வதற்கு 1913-ல் சேர் பொன்னம்பலம் அருணசலம் ஐரோப்பா சென்ருர். இலங்கைத் தேசாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 'சாமேர்ஸ்' பிரபுவை உடனே சந்தித்து இலங்கை சம்பந்தமான முக்கிய பிரச்சனைகளைப் பற்றி ஆலோசனை கூறலானுர். 1913, யூலை 15-ஆம் திகதி தேசாதிபதியவர்கட்கு இவர் பின்வரும் கடிதத்தை எழுதினுர்.

'தலைவரியை நீக்குவதற்கு இலங்கையில் இப்பொழுது ஒரு கிளர்ச்சி உண்டாகிவருகிறது. பௌத்தகுரு, அந்நிய நாட்டுத் தொழிலாளி என்பவர் தவிர, இலங்கையிலுள்ள சுயவல்லபம் படைத்த ஒவ்வொரு ஆணும், இன்று தலைவரிகொடுத்து வருகிருர். இது நியாயமற்ற வரி என்று பல முறை அவதானித்துள்ளேன். ஏனென்ருல் செல்வர்கள் கொடுக்கும் இந்த வரியையே ஏழைகளும் கொடுக்கவேண்டி இருக்கிறது. இதனை நீக்கப் பல வருஷங்களாக நான் முயற்சி எடுத்து வந்திருக்கிறேன். இலங்கையில் செல்வர்கட்கு ஒரு குறையுமில்லை. அவர்கள் ஆடம்பரப் பொருள்கட்கு மாத்திரமே பணச் செலவு செய்கின்றனர். சில காலத்திற்கு முன் வரி சம்பந்தமாக விசாரணை செய்ய ஓர் சபை நியமிக்கப்பட்டது. அச் சபை அறிக்கை சமர்ப்பிக்காமலே கலைந்துவிட்டது. இலங்கை வரிமுறையில் எவ்வளவு விபரீதங்களும் ஏற்றத்தாழ்வுகளும் நிலவுகின்றன வென்பதை அரசிறை பற்றிய அறிவைக் கொண்டு நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள். உப்புத்தீர்வையைப் பற்றிய சீர்திருத்தமே மிக அவசியமாக இன்று கவனிக்கப்பட வேண்டும். உப்புத்தீர்வையை நீக்கவேண்டும் அல்லது ஓர் அளவிற்குக் குறைக்கவேண்டும். அரசாங்கமே உப்புவர்த்தகத்தை இன்று ஓர் ஏகபோக வர்த்தகமாகக் கொண்டுள்ளது. உப்புத்தீர்வையை நீக்கும் கொள்கை ஏழைகட்கு அநுகூலத்தைக் கொண்டுவருவதுமன்றி, விவசாயத்திற்கும் ஊக்கம் அளிக்கும். விவசாய விருத்திக்கு உப்பு பெரிதும் தேவைப்படும். ஆனுல் இதன் விலை அதிகமாக இருப்பதன் காரணமாக, இதனை எவரும் உபயோகிப்பதில்லை.

தேயிலை, ரப்பர் பயிரிடும் தோட்ட முதலாளிகள் அபரிமிதமான வருவாயைப் பெறுகின்றனர். இலங்கையிலிருந்து வெளிநாடுகட்குத் தேயிலை, ரப்பர் ஏற்றுமதி செய்யும் வர்த்தகக் குழுவினர் பெருவாரியான இலாபத்தை ஈட்டுகின்றனர். இவர்கள் வருமான வரியோ, நில வரியோ இறுப்பதில்லை. ஏழைக் குடியானவன் கொடுக்கும் தலைவரியையே செல்வம் படைத்த முதலாளிவர்க்கத்தினரும் கொடுக்கின்றனர். வரி சம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட சபை இடையில் சிதைந்து போனதற்கு நியாயம்' என்ன ? முதலாளி வர்க்கத்தினர் பிரயோகித்த செல்வாக்கே சிதைவுறச் செய்தது எனலாம். அதுவுமல்லாமல் விசாரணைப் பொறுப்பேற்ற சபையினரும் ஏழை மக்களின் பரிதாப நிலைமைகளை உணரவில்லை '.

1915-ஆம் ஆண்டின் கலகங்கள், அரசியற் சீர்திருத்தங்களுக்கான கிளர்ச்சியை இனிமேலும் தாமதிக்கக் கூடாதென்ற உணர்ச்சியை சேர் பொன்னம்பலம் அவர்களுக்கு ஊட்டின. கலகங்களின் உண்மையான காரணத்தை உசாவித்தெளியவும், சிங்கள மக்களைத் தாறுமாறுகத் தண்டிப்பதைத் தவிர்க்கவும் ஒரு பாரபட்சமற்ற கொமிஷனை நியமிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தி 1915-ஆம் ஆண்டு, ஜுலை மாதம், 6-ஆம் திகதி விரிவான கடிதமொன்று தேசாதிபதிக்கு விடுத்தார். அத்துடன் அவர் இங்கிலாந்திலுள்ள தன் நண்பர்களுக்குத் தன் முயற்சிகளை ஆதரிக்கும்படி கேட்டு எழுதியதுமன்றி விசேஷமாக குடியேற்ற நாட்டுக்கந்தோரைச் சேர்ந்த திரு. (பின்பு சேர் பட்டம் பெற்றவர்) அலெக்சாந்தர் ஹரிஸ் அவர்களுக்கு கலகங்களின் உண்மை நிலைமைகளைத் தெளிவாக விளக்கினுர். 1927-ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 3-ஆம் திகதியன்று அருணுசலம் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தபொழுது திரு. ஈ. டபிள்யு. பெரேரா அவர்கள் இது சம்பந்தமாக அருணுசலம் அவர்கள் செய்த மாபெருஞ் சேவைகளைப் பற்றிப் பொதுமண்டபத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் கூறியதாவது : 'மகாவம்சத்தில் கூறப்பட்டது போல, இராணுவச் சட்ட காலத்தில் இலங்கை முழுவதும் ஒரு இழவு வீடு போல் இருள் அடைந்திருந்தபோது, சேர் பி. அருணுசலம் அவர்கள் சுவாலித் தெரியும் சுடர்போன்று கோபா

வேசத்துடன் சீறியெழுந்து இந்த அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்தவும், மீண்டும் சாதாரண நிலைமைகளை ஏற்படுத்தவும் இயன்றவற்றையெல்லாம் செய்தார்'. அலெக்சாந்தர் ஹரிஸ் அவர்கள் திரு. பெரெரா அவர்களுடன் பேசியபொழுது ' நீங்கள் பேசுவதைப்போலவே சரியான உண்மைகளைக் குறிப்பிட்டும், இவ்விடயத்தைப் பற்றிய உங்கள் கருத்தை ஆதரித்தும் எனது நண்பர் சேர் பி. அருணாசலம் எனக்குப் பிரத்தியேகக் கடிதங்கள் எழுதியுள்ளார்' என்று கூறியதாக அறியக்கிடக்கின்றது. குடியேற்ற நாடுகளின் காரியதரிசியுடன் அலெக்சாந்தர் ஹரிஸ் நேரடியான தொடர்பு கொண்டிருந்தாரென்றும், இராணுவச் சட்டங்களின்கீழ் மக்களுக்கேற்பட்ட இன்னல்கள் நீங்கும் வகையில் அவர்களுக்குக் கிடைத்த சொற்ப நிவாரணம் சேர் பி. அருணாசலம் அவர்கள் இதில் தலையிட்டு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாகத் தோன்றியதென்பதைப் பலர் அறியமாட்டார் என்றும் திரு. பெரெரா அவர்கள் மேலும் கூறினார்.

1917-ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம், 2-ஆம் திகதி கொழும்பு விக்டோரியா மெசோனிக் மண்டபத்தில் திரு. ஈ. ஜே. சமரவிக்கிரம அவர்கள் தலைமையில் நடைபெற்ற இலங்கைத் தேசிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் அதன் காரியதரிசியான திரு. டி. ஆர். விஜயவர்த்தன அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அருணாசலம் அவர்கள் ' எங்கள் அரசியற் தேவைகள் ' என்பதையிட்டு நிகழ்த்திய ஓர் சரித்திரப் பெருமைவாய்ந்த சொற்பொழிவில், சுய ஆட்சிக்கானவிவாதங்களைத் தெளிவாக விவரித்தார். முக்கியமான இச்சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் கூறியதாவது : ' காலத்துக்குக் காலம் இலங்கையில் அரசியற் சீர்திருத்தத்துக்காக அநேகர் கிளர்ச்சி செய்தனரெனினும், சேர் பி. அருணாசலம் அவர்கள் '' எங்கள் அரசியற் தேவைகள் '' என்பதைப்பற்றிச் சொற்பொழி வாற்றிய பின்னரே மக்கள் விடாப்பிடியுடன் உறுதியாகக் கிளர்ச்சி செய்வதன் அவசியத்தைத் தெரிந்து கொண்டனர் . . . இந்தப் பிரசங்கத்தையும் இது சம்பந்தமாக சேர் பி. அருணாசலம் அவர்கள் பிரசுரித்தவற்றையும் வாசிக்கும்படியும், அவற்றை அரசியற் கைநூல்போன்று கருதும்படியும் அரசியலைக்

கற்கும் வாலிபர்களை நான் விசேஷமாக வேண்டிக்கொள்கின்றேன் '.

1918-ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ' சிலோன் டெயிலி நியூஸ் ' பத்திரிகையின் முதலாவது இதழில் ஓர் ஆசிச் செய்தியை சேர் பொன்னம்பலம் அவர்கள் விடுத்திருந்தார். அச் செய்தியில் அவர் கூறியதாவது : ' அரசியற் சீர்திருத்தத்தைக் கோரும் ஆர்வத்தில் அதனையே நம் இறுதி இலக்காகக் கருதி விடாது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எங்கள் இலக்கை அடைவதற்கு ஒரு கருவியாகவே அரசியல் சீர்திருத்தத்தில் நாட்டங்கொள்ளவேண்டும். எங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் அரசியல் சீர்திருத்தங்களை நாடவில்லை. ஆனால் எங்கள் கடமைகளை—அதாவது எங்களுக்கும் எங்கள் நாட்டுக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காகவே நாம் அரசியல் சீர்திருத்தங்களை வேண்டி நிற்கின்றோம். தனிப்பட்டவர்களைப் போலவே, மக்களினமும் கடவுளால் வகுக்கப்பட்ட கடமையொன்றைப் புரிவதற்கு இங்கு தோன்றியுள்ளது. இக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஒருவர் சுய அபிவிருத்தியையும் பொறுப்பை ஏற்கும் தகமையையும் உடையவராயிருத்தல்வேண்டும் '. அவர் மேலும் கூறியதாவது : ' நம்நாட்டு வாலிபர்களின் பொதுவாழ்வில் ஆன்மீக ஆற்றல் செறிந்திருக்கவேண்டும் என நான் எதிர்பார்ப்பதுடன் அவர்கள் கட்டாயமாக இதனைப் பின்பற்றுவார்களென்றும் நான் நம்புகின்றேன். அவர்களுள் ஒவ்வொருவரும் எல்லோருடைய நல்வாழ்வின் மூலமும் தத்தம் நல்வாழ்வை நாடுவர்; பிறருடைய வாழ்க்கையைக் கொண்டு தம் வாழ்வைக் கணிப்பர்; எல்லோருடைய சிரத்தையை முன்னிட்டும் தம் சிரத்தையை நாடுவர். எங்கள் அன்புக்குரிய தாயகத்தின் பாதாரவிந்தங்களில் அவர்கள் தமது ஆர்வமிக்க சேவைகளை ஆவலுடன் அர்ப்பணஞ் செய்வர். மகாகவி தாந்தே கூறியவாறு, மனிதர்கள் மத்தியில் வியாபிக்கும் பகுத்தறிவு, ஆத்மீக சக்திகள், சிந்தனையுலகிலும் செயலுலகிலும் உயர்ந்த அபிவிருத்தியைப் பெறக்கூடும் என்பதற்கிணங்க, நம்நாட்டு வாலிபர்கள் ஒற்றுமையுடன் உழைப்பார்கள். இத்தகைய உற்சாகத்தினாலும் இலட்சியத்தினாலும் உந்தப்பட்ட நம்நாட்டு வாலிபர்களினுதவியால், நம்

நாடு புதிய தேஜஸுடன் வளர்ந்து மகா பராக்கிரமபாகுவின் பெரும் புகழ் தினகரனின்முன் தீபம் போல மறையத்தக்க தாகவும், சகல நாடுகளுக்கும் ஓர் கலங்கரை விளக்கம் போல் இது அமையத்தக்கதாகவும் முன்னேறுமென நான் எதிர்பார்க் கிறேன் '. ஒரு மனிதனிடமுள்ள சிறந்த இயல்புகளைத் தொழிற் படுத்தும் அற்புத சக்திவாய்ந்த வார்த்தைகளே இவை ; சிந் தனையிலிருத்தத் தக்கனவும் ஊக்கமளிக்கத்தக்கனவுமாய இவ் வார்த்தைகள், இந்நாட்டுக்காகச் சேவை புரிவதற்குத் தம் வாழ்க்கையைத் தியாகஞ்செய்யுமாறு இலங்கையிலுள்ள ஒவ் வொரு வாலிபரையும் அறைகூவி அழைப்பனவாகும்.

சுயாட்சி பெறும் நோக்கத்துடன் 1917-ஆம் ஆண்டு, மே மாதத்தில் இலங்கைச் சீர்திருத்தச் சங்கமொன்றை அருணா சலம் அவர்கள் நிறுவினார்கள். அத்துடன் 1917-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திலும், 1918-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திலும் முறையே இரு அரசியல் மகாநாடுகளை ஒழுங்குசெய்தார். 1919-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் ' இலங்கையில் அரசியற் சீர்திருத்தம் ஏற்படவேண்டியதற்குரிய காரணங்கள் ' என் பதையிட்ட ஒரு அறிக்கையைத் தயாரித்து, அடுத்த மாதத் தில் இலங்கைச் சீர்திருத்தச் சங்கத்தினதும், இலங்கைத் தேசிய சங்கத்தினதும் கூட்டுக் கமிட்டியின் பெயரில் அதனைப் பிரசுரித் தார். இத்தீவின் சிங்களப் பகுதிகள் எங்கணும், அரசியல், சமுதாய, பொருளாதார அபிவிருத்திக்காக மக்கள் சங்கங் களை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் 1919-ஆம் ஆண்டு, செப்டெம் பர் மாதம், 20-ஆம் திகதி திரு. எப். ஆர். சேனநாயகா அவர் கள் தலைமையில் நடைபெற்ற ஒரு சிங்கள மகாநாட்டில் அவர் ஓர் சொற்பொழிவாற்றினார். இந்த இயக்கம்தான் லங்கா மகாசனசபை உடனடியாகத் தோன்றுவதற்குக் காரணமானது. இது தொடங்கியபொழுது இதற்குச் சகல வெற்றிகளும் ஏற்படவேண்டுமென்று விரும்பி அருணாசலம் அவர்கள் கூறிய வார்த்தைகளை நாம் நினைவுகூருதல் பொருத்த மானது. அவர் கூறியதாவது : ' உங்கள் நன்மைக்காகவும், உங்கள் குடும்பங்களின் நன்மைக்காகவும், எங்கள் அன்புக்குப் பாத்திரமான இலங்கையன்னையின் நன்மைக்காகவும், இந்த இயக்கம் பூரணமான வெற்றியீட்டும்வகையில் நீங்கள் யாவ

ரும் உற்சாகத்துடன் உழைப்பீர்களென்று நான் நிச்சயமாக நம்புகின்றேன் '.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, 1919-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 24-ம் திகதி, கொழும்பு ரவர் ஹோலில் நடைபெற்ற கூட்டத்தில் அருணாசலம் அவர்கள் ' தற்போதைய அரசியல் நிலைமை ' என்பதுபற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். இத்தகைய பூர்வாங்க வேலைகளின் பயனாக 1919-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 11-ஆம் திகதியன்று இலங்கைத் தேசீய காங்கிரஸ் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. அருணாசலம் அவர்களே காங்கிரஸுக்கு முதலாவது தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். காங்கிரஸ் நிறுவப்பட்டதை திரு. ஸி. ஈ. கொறயா அவர்கள் பின்வருமாறு தெட்டத்தெளிவாக வர்ணித்துள்ளார் : ' கடந்த சில வருடங்களுள் சகல முயற்சிகளுக்கும் மத்திய ஸ்தானமாகிய இவ்விடத்தில் (கொழும்பு) கூர்ந்து அவதானிக்கும் கண்களையுடைய ஒரு பெரியார் ஆங்காங்கு பரந்துகிடந்த தனிப்பட்ட ஆர்வப்பொறிகள், தனித்தனியாகக் கிடந்து பிரகாசமிழந்து அணைந்துபோகும் தறுவாயிலிருப்பதைக் கண்ணாரக் கண்டார். இதனைக் கண்ணுற்ற அப்பெருமகனர் எழுந்து விரைந்து சென்றார். சென்று பரந்துகிடந்த அப்பொறிகளை ஒன்று சேர்த்து கொழுந்துவிட்டெரியும் தமது தேசாபிமான உணர்ச்சியால் அவற்றுக்குச் சக்தியூட்டித் தேசீய முயற்சியெனும் பெருந்தீயாக மாற்றினர். இப்பெருந்தீயில் புடமிடப்பட்டு உருவாகியதே இலங்கைத் தேசீய காங்கிரஸ். இந்தக் காங்கிரஸ் காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் அவர்களின் புனித ஊக்கத்திலிருந்து பிறந்ததொன்றாகும் '.

அரசியல் சீர்திருத்தத்துக்காக அருணாசலம் அவர்கள் இலங்கைக்குச் செய்த சேவைகளை மாத்திரம் கணிக்குமிடத்து, அவரது நாட்டு மக்களின் என்றென்றுமழியா நன்றி பாராட்டுதல்களுக்கு அவர் உரிமையுடையவராயிருந்திருப்பார். ஆனால் அவரது அபார அறிவாற்றலும் அளவற்ற ஊக்கமும் பலரிடத்தும் பரந்துநின்ற இரக்கமும் ஏனைய துறைகளிலும் அவரைத் தொண்டாற்றத் தூண்டின. இலங்கையின் அரசியல் விடுதலைக்காகப் போராடும் ஆர்வத்தை அருணாசலம்

அவர்கள் நாட்டு மக்களிடையே தட்டியெழுப்பியபோதும், மக்களின் சமூக நிலைமைகளைச் சீர்திருத்தவேண்டியதன் அவசியத்தை மறந்திருக்கவில்லை. அது மாத்திரமன்றி செல்வந்தர்கள் துரதிர்ஷ்டத்தின்பாற் சிக்குண்டு வாழும் தங்கள் சகோதரர்கள் விஷயத்தில் நிறைவேற்ற 'வேண்டிய ஒரு கடமையுண்டென்பதை வலியுறுத்தத் தவறியதுமில்லை. இலங்கை ஞேடிய சமூகத்தினரின் கல்விக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஒரு கொமிஷனுக்குத் தலைமைவகிக்கும்படி 1904-ஆம் ஆண்டளவில் தேசாதிபதி பிளேக் அவர்கள் அருணுசலம் அவர்களைக் கேட்டார்கள். வித்தியாதிபதி திரு. ஹாவேட், சட்டநிரூபணசபையில் கண்டிப் பிரதிநிதியாகவிருந்த கௌரவ திரு. எஸ். என். டபிள்யு. ஹுலுகல்ல, ஒரு கிறிஸ்தவ பாதிரியாரான வண. ஆர். ஸி. ஒலிவர் ஆகியோர் 'அருணுசலமவர்களுடன் அக்கொமிஷனில் கடமையாற்றினர். இக்கொமிஷனர்கள் தங்கள் விசாரணைகளைச் செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஐந்து மாதங்கள் சென்றன. இவ்வறிக்கை, ஞேடிய சமூகத்தினர் வாழ்ந்த நிலைமைகளையும், அவர்களைச் சிறந்த பிரசைகளாக்குதற்கு அவர்களுக்குக்' கல்வியூட்ட எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளையும் விரிவாக விளக்குவதொன்ருயிருந்தது.

1913-ஆம் ஆண்டில் அவர் இங்கிலாந்துக்கு விஜயஞ்செய்தபொழுது சமூகசேவை வேலைகளைக் கற்றறிய அவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. லண்டன் மாகாணச்சபைகளையும், ஸ்தல ஆட்சிச்சபைகளையும், வித்தியா கந்தோரையும் அவர் தரிசித்து 'ஆரம்பக்கல்வி, வறியவர்களுக்கு வீடமைத்தல் என்பவை சம்பந்தமாக அவை பின்பற்றும் முறைகளைக் 'கற்றதுடன் அங்குள்ள ஆஸ்பத்திரிகளையும், வேலைத்தலங்களையும் பரிசீலனை செய்தார். அவரது தினக்குறிப்புப் புத்தகத்தில் 1913-ஆம் ஆண்டு, மே மாதம், 12-ஆம் திகதி அவர் எழுதியுள்ள குறிப்பு பின்வருமாறு : ' ஸ்தல ஆட்சிச்சபையைத் தரிசித்தேன். திரு. பேர்ண்ஸ் அவர்கள் அழைத்துச் சென்று யாவற்றையும் காண்பித்தார். அங்கிருந்து ஹம்மர்சிமித் ஆஸ்பத்திரிக்கும், வேலைத்தலத்துக்கும் சென்றேன். வறிய

வர்களுக்கு உன்னதமான வசதி வழங்கப்படுகிறது. தங்கியிருக்கும் நோயாளர் தொகை 779. பின்பு லண்டன் மாகாணச்சபையின் வித்தியா கந்தோருக்குச் சென்றேன். மக்களின் கல்வியைப்பற்றி அதிக தகவல்களைப் பெற்றேன். இலங்கையில் சமூகசேவைகளுக்கு அத்தியாவசியமானவற்றை அறிந்தேன். மக்கள் சேவைக்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும். கொழும்பில் வறியவர்களுக்கு வீடமைக்கவும், மக்களின் ஆரம்பக்கல்விக்கும், கூலியாட்களைத் தற்போதைய அடிமைத் தனத்தினின்று விடுவிக்கவும் அதிக கருமங்கள் செய்யப்படவேண்டியிருக்கின்றன '.

அவர் திரும்பி வந்ததும், தம் நாட்டு மக்களில் அநேகரைச் சீர்திருத்துவதற்குப் பெரும் வேலைகளை ஆரம்பிக்கத் தாமதிக்கவில்லை. ஒரு நாட்டின் வாலிபர்கள் தாம் எதிர்காலச் சந்ததிக்குப் பொறுப்பானவர்கள் என்பதை உணர்ந்து, ஆர்வமுள்ள இளைஞர் குழுவொன்றை அவர் திரட்டி சமூகசேவை உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டினர். ஹோட்டன் பிளேஸிலிருந்த 'பொன் கிழார்' என்னும் அவரது கொழும்பு வாசஸ்தலத்துக்கு 1914-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 19-ஆம் திகதி சிலரை அழைத்து தம் கருத்துக்களை வெளிப்படுத்தியதுடன் வறியவர்களுக்காக தம் மனதில் கொழுந்துவிட்டெரிந்த உணர்ச்சியைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்: 'மக்களின் தேவைகளை நாம் நன்கு அறிந்து, அறிவு, பொழுதுபோக்கு என்பவற்றை அவர்களுக்குக் கிடைக்கச்செய்து அவர்களது வாழ்க்கையைத் துலக்கி அழகுபடுத்த வேண்டும். அத்துடன் கற்றவர்கள், செல்வந்தர்கள், குறைந்த நிலைமையிலுள்ள சகோதரர்கள் என்போரிடையே இனிய மனித உறவுகளை நிலவச் செய்தல்வேண்டும். இந்த வேலை மிகப் பாரியதொன்றெனினும், மக்களின் கல்வி, வைத்திய சௌகரியம், பொருளாதாரச் சீர்திருத்தம், அவர்களின் வீட்டுத்திட்டங்களை அபிவிருத்திசெய்தல், அவர்களின் இல்லங்களுக்குச்சென்று நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் மூலம் துப்புரவாகவும் சிறப்பாகவும் வாழ அவர்களுக்குக் கற்பித்தல், வைத்திய சௌகரியங்களை அளித்தல், கட்டாயமான வீமாத்திட்டங்களாலும், குறைந்த பட்ச சம்பள நிர்ணயத்தாலும் பயன்களைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.



சேர் பொன்னம்பலம் அருணசலம்




இலங்கைச் சமூகசேவைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம்

1915-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 29-ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் உறுதியான ஒத்துழைப்புடன் சேர் பொன்னம்பலம் அவர்கள் இலங்கைச் சமூகசேவைச் சங்கத்தை அங்குரார்ப்பணஞ் செய்தார். அருணுசலம் இதன் முதலாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அவரால் வகுக்கப்பட்ட பிரமாணங்களும் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

செயல் புரிவதில் நாட்டமும் விருப்பமும் கொண்ட பல தொண்டர்களைக் கூட்டி அவர்களிடையேயும் தம்மைப் போலவே சமூகசேவையில் பேரார்வம் கொழுந்து விட்டெரியும்படி செய்தார். சேர் அருணுசலம் அவர்கள் வெறும் ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் கூறிவிட்டு அதிலே திருப்தி கொண்டிருக்கவில்லை. சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நாளொன்றுக்கு 8 மணி நேரம், 10 மணி நேரம் வேலை செய்தும் சங்கம் ஆரம்பிக்கவிருந்த பெரும்பணிக்கு அங்கத்தினர்களைப் பயிற்றுவதற்காகச் சமூகக் கல்வி வகுப்புகளை நடத்தியும் ஒரு உண்மையான சமூக ஊழியர் எப்படியிருக்கவேண்டுமென்பதற்கு உதாரண புருடராக அவர் விளங்கிவந்தார். இராப் பாடசாலைகள் பலவற்றைத் தொடங்கினுர். சேரிகள் தோறும் சென்று தொழிலாளரிடையே கல்வியைப் பரப்பினுர். சுகாதாரம், சுத்தம் சம்பந்தமாக ஒளிப்படவிரிவுரைகளை நிகழ்த்த ஏற்பாடுகள் செய்தார். சேரிச் சிறுரின் நலனுக்காக விளையாட்டுச் சங்கங்களையும் சாலைகளையும் நிறுவினுர். தம் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயைப் பெற்றுக் கொள்ளத்தக்க முறையில் சிறுவர், சிறுமியருக்குக் கைத்தொழிற் கல்வி தரும் விஷயமும் கவனிக்கப்பட்டது. இறந்துபடும் தறுவாயிலிருந்த குடிசைக் கைத்தொழில்களுக்குப் புத்தியிர் அளிக்கப்பட்டது. இந்நோக்கத்துடன் கைத்தொழில் விவசாய முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதற்காக கூட்டுறவு கடன் உதவிச் சங்கங்களை நிறுவும்படி அவர் சிபார்சு செய்தார். இச் சங்கங்கள் விவசாயிகளுக்கும் தொழிலாளருக்கும் மூலப் பொருட்களையும், உபகரணங்களையும் பெறுவதற்கும் பானை வனைதல், கூடைமுடைதல், வெள்ளி, பித்தளை வேலைப்பாடு, ரேந்தை பின்னல், பருத்தி நெசவு என்பவற்றுக்கு வேண்டிய

யந்திரங்களைப் பெறுவதற்கும் கடன் கொடுத்து உதவவேண்டு மென்று அவர் ஆலோசனை கூறினார்.

இவர் ஏழை மக்களின் நலனுக்காகச் செய்த சேவைகளைப் பாராட்டுமுகத்தான் பிரதம நீதியரசர் சேர் அன்டன் பேட்ரம், (இவரது திருவுருவப்படத்தை கவர்ணர் திறந்து வைத்த பொழுது), தாம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'பரந்ததும் பல்தரப்பட்டதுமான பண்பாடு வாய்க்கப் பெற்றவர் சேர் பொன்னம்பலம். இந்த நாட்டிலே இவரிலும் பார்க்கச் சிறந்த பண்பாடு வாய்க்கப் பெற்றவர் யாரும் எப்போதும் இருந்ததே கிடையாது. தம் கல்வியிலும் நூற்கு வியலிலும் கட்டுண்டு புத்தகப் பூச்சியாக அவர் வசிக்க வில்லை. பொதுமக்களின் துயரங்களை அவர் உணர்ந்தார். அவர் சமூகசேவை இயக்கத்தைத் தோற்றுவித்தது, அது ஒரு நவநாகரிக இயக்கம் என்பதற்காகவன்று. அவர் ஏழை மக்களின் துன்பங்களை உணர்ந்தார். வோர்ட்ஸ் வோர்த் என்னும் ஆங்கிலக் கவிஞன் கூறியவாறு: "மனிதகுலத் தின் துக்கந் தோய்ந்தமௌனக் குரல்" அவரது காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. சேரி மக்களுக்காக அவர் உள்ளம் துடித்தது. சேரிவாசிகள் ஒவ்வொருவரும், சேர் பொன்னம் பலத்தின் முன் மாதிரியைப் பின்பற்றுவதனைத் தமது அரும் பெரும் இலட்சியங்களில் ஒன்றாகக் கருதவேண்டும்'.

சமூகசேவை வேலைகளில் ஈடுபட்ட அதே நேரத்தில், அவர் தொழிலாளர் நலனையும் மறந்தாரில்லை. இலங்கையின் முதலாவது தொழிலாளர் சங்கம் சேர் பொன்னம்பலம் அவர் களாலேயே தோற்றுவிக்கப்பட்டது. இது 1919, ஜூன் மா தம், 25-ஆம் தேதியன்று நிகழ்ந்தது. இத்தேதிக்கு முன்னர் தொழிலாளர் நலனை இலங்கைச் சமூகசேவா சங்கமே கவனித்து வந்தது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இத் தொழிலாளர் சங்கத்தின் பெயர் இலங்கைத் தொழிலாளர் சேமாபிவிருத்திச் சங்கம் என்பதாகும். இதன் முதலாவது தலைவராக சேர் அருணாசலம் தெரியப்பட்டார். திரு. பெரிசுந் தரம் இதன் முதலாவது காரியதரிசியாவார். இச்சங்கத்தின் நோக்கம் அதன் விதிகளில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—

'இலங்கையிலுள்ள தொழிலாள வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாத்தலும், அவர்களது சேமாபிவிருத்தியை அதிகரித்தலும்; அவர்களது சமூக, தொழில் நிலைமைகளைச் சீர்திருத்துதலும், அன்னரது லௌகீக, ஆத்மீக அபிவிருத்திக்கு உதவுதலும்; மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிய பிரச்சினைகளைக் கற்றறிதலை ஊக்குவித்தலும்'.

இச்சங்கம் 1921-ஆம் ஆண்டில் நடைபெற்ற ரெயில்வே, துறைமுக வேலை நிறுத்தங்களில் தொழிலாளருக்கும் அதிகாரிகளுக்குமிடையே நடந்த சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒரு முக்கிய பங்கை வகித்தது. இச்சங்கத்தின் வேண்டுகோட் பிரகாரம் வண. ஸி. எப். அண்ட்ரூஸ் இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளரின் நிலைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக இங்கு வந்தார். திரு. அன்ட்ரூஸ் 1920-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதத்தில் சேர் பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் ரவர் ஹாலில் தொழிலாளரும் பிறரும் திரளாகக் குழுமிய ஒரு கூட்டத்தில் பேசினர். 1921-ஆம் ஆண்டில் தொழிலாளர் இயக்க வீரர்களில் இன்னொருவரான கேர்ணல் ஜோசையா வெட்ஜ்வூட் என்பாரும் இலங்கை வந்து பல விரிவுரைகள் நிகழ்த்தினர். 1920-ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதத்தில் சேர் அருணுசலம் தனது தொழிலாளர் சங்க இயக்கத்தை மிகவும் விரிவடையச்செய்து முடிவில் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தையும் தோற்றுவித்தார். தொழிலாளர்களின் நலன்களுக்காக, அவர்களின் வாழ்க்கை நிலைமைகளின் உயர்வுக்காக இவ்வியக்கம் சளையாது முயன்று வரவேண்டுமென ஊக்குதற்கு இவர் எப்போதும் மறந்ததில்லை. 'மகாவம்ச' நூலிற் கூறியுள்ளதுபோல அவர் தன்னை 'மக்களோடு ஒன்றிய ஒருவராக' ஆக்குதற்கு எப்பொழுதும் முயன்று வந்தார். இவரது முயற்சிகளின் பெரும் பயனுகவே தொழிலாளர் சட்டத்தில் இருந்த தொழிலாளரைத் தண்டிக்கும் ஏற்பாடுகள் நீக்கப்பட்டன. இந்தியத் தொழிலாளருக்குப் பாதகமானமுறையில் நிலவிவந்த 'துண்டு' முறையை ஒழிப்பதற்காக அவரின் சங்கங்கள் பெரிதும் போராடின. இச்சங்கங்கள் மட்டுமே தொழிலாளரின் நலவுரிமைகளுக்காக அக்காலத்தில் இந்நாட்டில் போராடிவந்த ஸ்தாபனங்

களாகும். கேர்ணல் வெட்ஜ்வூட் பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஜூலை 14-ஆம் தேதியன்று பேசும்போது சேர் பொன்னம்பலத்துக்கு ஒரு புகழ்மாலை சூட்டினுர். அவர் கூறியதாவது : 'இலங்கையில் ஏறக்குறைய அடிமைகள்போல் வசித்துவரும் இத்தொழிலாளர் சார்பில் இருவர் பெருந்தொண்டாற்றி வருகின்றனர். ஒருவர் திரு. அண்ட்ரூஸ், மற்றவர் முன்னை நாள் அரசாங்க ஊழியரான சேர் பொன்னம்பலம் அருணுசலம். திரு. அருணுசலம் பல வருடங்களாக இப்பிரச்சினைபற்றிச் சங்கங்கள் தோறும் சென்று பலவித முயற்சிகளைச் செய்து வருகின்ருர். அவர் அரசாங்க அதிகார உத்தியோகத்தராக முன்னர் இருந்தவர் ஆதலின் அதிகார உத்தியோகத்தர் அவரை விரும்புவதில்லை. அவர் கல்விமான். தொழிலாளரின் நிலைமைகளுக்குப் பரிகாரம் தேடும் அவர், தனது நாட்டுத் தொழிலாளரில் ஒரு பெரும் பகுதியினருக்கு விடுதலையைத் தேடித்தந்திருக்கிருர். அவருக்கு இச்சபையில் எனது நல்வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்'. வெட்ஜ்வூட், சேர் பொன்னம்பலத்தின்மீது மிகவும் பெருமதிப்புப் பூண்டிருந்தார். சேர் பொன்னம்பலத்தின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் நூல்வடிவில் வெளிவந்த ஞான்று அதற்கெழுதிய முகவுரையில் அவர் பின்வருமாறு கூறுகிருர்: 'ஒரு அருணுசலத்தையும், ஒரு ஜே. ஸி. ஸ்மட்சையும் அளித்த கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைபற்றி எவ்வளவு சிறப்புரைகள் கூறினும் தகும்'. குருப் பிரபு 1922-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 27-ஆம் தேதியன்று சேர் அருணுசலத்துக்குப் பின்வருமாறு எழுதினுர்:—'இந்தியத் தொழிலாளர் சார்பில் நீங்கள் நீண்ட காலமாகச் செய்தமுயற்சிகள் வெற்றிகரமாக முடிந்துள்ளமை தங்களுக்குப் பேருவகை நல்கியிருக்கவேண்டும். நம் எல்லோரிடமிருந்தும் நன்மை பெறுதற்குப் போதிய தகுதி வாய்ந்த இம்மக்கள் வாழ்வில் திருப்தி அளித்தமை, சாம்ராஜ்யத்துக்குச் செய்த ஒரு உண்மையான சேவையாகும்'.

சேர் அருணுசலம் கல்வித்துறையிலும் கண்ணேட்டம் செலுத்திஞர். நடைமுறையிலிருந்த கல்வித்திட்டத்தில் அதிருப்திகொண்ட அவர், அதனைச் சீர்திருத்துதற்கான எத்தனையோ ஆலோசனைகளைப் பலதடவைகளிற் கூறினுர். 1900-ஆம்

ஆண்டில் சேர் அருணுசலம் இது சம்பந்தமாக கல்வி அதிபர், எஸ். எம். பரோஸ் என்பாருடன் ஒரு நாள் சில முக்கிய விஷயங்களைப் பேசினுர். இப்பேச்சு திரு. பரோஸ் அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததன்காரணமாக அன்னுர் சேர் அருணுசலத்திடம் அக்கருத்துகளை ஒரு அறிக்கையாகத் தயாரித்துத் தரும்படி வேண்டிக்கொண்டார். இதன் பிரகாரம் 1900, ஜூலை 8-ஆம் தேதியன்று தம் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில் அவர் கொழும்பில் வழங்கப்பட்டு வந்த ஆரம்ப கல்விமுறையின் அடிப்படையான குறை ஆங்கிலத்தின்மூலம் கல்வி பயிற்றப் படுதலே என்று குறிப்பிட்டார். உண்மையில் அவர்தான் இலங்கையில் தாய்மொழிக் கல்வி இயக்கத்தின் தந்தையாவர். அவர் கல்வி அதிபரிடம் பின் வருமாறு கேட்கிறுர் :—'இங்கிலாந்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலத்தைத் தள்ளிவிட்டு, ஜெர்மானிய மொழியைப் போதனுமொழியாக்கினுல் எவ்வாறிருக்கும் எனயோசித்துப் பாருங்கள்! ஆங்கிலத்துக்கும் சிங்களத்துக்கும் (அல்லது தமிழுக்கும்) இருக்கும் ஒற்றுமையிலும்பார்க்க ஜெர்மானிய மொழிக்கும் ஆங்கிலத்துக்கும் அதிக ஒற்றுமை இருக்கிறது. எனவே சிங்களச் சிறுர்களும் தமிழ்ச் சிறுர்களும் ஆங்கிலம் கற்பதைவிட ஆங்கிலச் சிறுர் ஜெர்மானிய மொழியை இலகுவில் கற்கமுடியும்'.

கல்வித்திட்டத்தில் காணப்படும் குறைகளை அகற்ற அவர் பலவித நடவடிக்கைகளை எடுக்கும்படி சிபார்சு செய்தார். திரு. பரோஸ், சேர் அருணுசலத்துக்கு இதற்காக நன்றி கூறினுர் எனினும் இந்தச் சிபார்சுகளை அமுல்நடத்த அவர் முன்வரவில்லை என்பதைப் பிந்திய கடிதப் போக்குவரத்து நன்கு விளக்கியது. சேர் அருணுசலம் உடனே திரு. பரோஸிலும் பார்க்க உயர்ந்த மேலதிகாரிகளுக்கு மனுச்செய்தார். தமது அறிக்கையின் ஒரு பிரதியைத் தேசாதிபதி சேர் வெஸ்ட்ரிட்ஜ்வே அவர்கட்கு அனுப்பி கல்வித் தேவைகளை ஆராய ஒரு கொமிஷன் நியமிக்கவேண்டுமென்றும் கடிதமூலம் கேட்டுக் கொண்டார். இக்கடிதம் 1900, ஏப்ரில் 30-ஆம் தேதியன்று எழுதப்பட்டது. இந்த அறிக்கையிலே இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவவேண்டுமென்றும், இதைச் செய்ய

முடியாதவிடத்து, ரோயல் கல்லூரியை ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் அந்தஸ்துக்கு உயர்த்தவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். இவ்விதம் ஒரு கழகம் அமைத்தால் அது 'மக்களுக்கு அழியா நன்மை பயக்கும். அத்துடன் இலங்கையில் தேசாதிபதி அவர்களின் ஆட்சிக்கு ஒரு நல்ல ஞாபகச்சின்னமாகவும் விளங்கும்' என்று அவர் குறிப்பிட்டார். இவ்வேண்டுகோளுக்கு அவருக்குக் கிடைத்த பதில் அவரது நம்பிக்கைகள் யாவற்றையும் சிதறடித்தது. அதில் பின் வருமாறு கூறப்பட்டிருந்தது:—'கல்விபற்றிய உங்கள் அறிக்கை நிர்வாகக் கவுன்சிலில் முறையாகக் கவனிக்கப்பெற்றது. தேசாதிபதி அவர்கள் இது பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று அக்டோபர் 15-அம் தேதி முடிவுசெய்தார்'. சேர் அருணாசலம் இத்தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. மீண்டும் திரு. பரோசுடன் அவர் கடிதப் போக்குவரத்து நடத்தினார். கல்வி முறையின் அபிவிருத்திக்கான பல ஆலோசனைகளையும் அவர் கூறிவந்தார். உதாரணமாக ஆங்கிலச் சரித்திரம், பூமிசாத்திரம் என்பவற்றுக்குப் பதிலாக, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் சரித்திரம், பூமிசாத்திரம் என்பவற்றைப் படிப்பித்தலே உகந்தது என அவர் ஆலோசனை கூறினார். ரோயல் கல்லூரியின் அபிவிருத்தியில் அவர் மிகவும் சிரத்தை காட்டினார். உயர்தர பாடசாலைகளுக்கு இது ஓர் முன்மாதிரியாக விளங்கவேண்டுமென அவர் கூறிவந்தார். இக்காலத்தில்தான் சேர் அருணாசலம் இலங்கைச் சரித்திரம் சம்பந்தமாகப் பல பிரசங்கங்களை நிகழ்த்தி, பாடசாலைகளிலும், வெளியிலுள்ள படித்த மக்களிடையேயும் இலங்கைச் சரித்திரத்தில் புதியதோர் ஆர்வம் பிறக்கும்படி செய்தார்.

சேர் பொன்னம்பலம் இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தின் பிதா என அழைக்கப்படுகின்றார். இது முற்றிலும் பொருத்தமுடையதே. அவரது பெருமுயற்சியாலேயே 1906-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் தொடங்கப்பட்டது. இச்சங்கத்தினர் வெளியிட்ட சஞ்சிகை மிகவும் உன்னதமான ஒரு வெளியீடு. சேர் பொன்னம்பலம் பல்கலைக்கழகத்தோடு கொண்டிருந்த தொடர்பு எத்தகையது

என்பதை இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதலாவது அதிபரும் சிறந்த அறிஞருமான பேராசிரியர் மார்ஸ் அவர்களின் சீரிய கூற்று நன்கு விளக்குகிறது. மதுரையில் சேர் அருணுசலம் இறந்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற பேராசிரியர் மார்ஸ், கல்லூரியின் மகாமண்டபத்தில் மாணவர்களைக் கூட்டி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர். மறக்கவொண்ணுத இவ்வரிய சொற்பொழிவில் அவர் கூறியதாவது:

'இலங்கையில் பல்கலைக்கழகங்காணும் திட்டத்தின் உண்மையான பிதாவாய் விளங்கிய ஒருவரது ஞாபகத்திற்கு நம் மரியாதைகளைச் செலுத்துதற்காகவே நான் உங்களை இங்கே குழுமும்படி கேட்டுள்ளேன். அரசாங்க ஊழியர், அரசியல்வாதி, கல்விமான், கல்வித்துறையில் தொண்டாற்றியவர், சமூக சீர்திருத்தக்காரர், ஞானி—என்ற தம் பல்துறைவாழ்வில் அவர் செய்த சேவைகளைப்பற்றியும், அடைந்த பல்வித வெற்றிகளைப்பற்றியும் பலரும் பலபட எழுதியுள்ளார்கள். ஆனுல் அவரது பிந்திய நாட்களில் அவரைச் சார்ந்தார் எவர்க்கும் ஊக்கமும் உணர்ச்சியும் நல்கிய ஒரு துறைபற்றி, அவர் உள்ளத்திற்கு மிகப்பிரியமானதும், என்னேடும் உங்களோடும் தொடர்புகொண்டு விளங்குவதுமான இப்பல்கலைக்கழகக் கல்லூரி என்னும் ஸ்தாபனம் சம்பந்தமாக அவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றி அதிகம் கூறப்படவில்லை. ஒன்றும் கூறப்படுவதில்லை என்று கூடக் கூறிவிடலாம். 1906-ஆம் ஆண்டு, ஜனவரி 19-ஆம் தேதியன்று இலங்கையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவுதல்வேண்டும் என்ற பிரச்சினை சம்பந்தமாக நடாத்தப்பெற்ற பொதுக்கூட்டத்திற்கு சேர் அருணுசலமே தலைமை தாங்கினுர் என்பதை நான் ஞாபகமூட்டுகிறேன். இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் உருவாதற்குக் காரணமான பொதுக்கூட்டத்தில் அவர் முடிவுரையாகக் கூறிய சில வார்த்தைகளை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

'ஆகவே, இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்வதில், நம் முன்னேர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதோடல்லாமல் இன்றியமையாத ஒரு பணியையும் நாம் செய்கிறேம். பல்கலைக்கழகம் எவ்வாறு அமையவேண்டும், படிப்பித்தல், பரீட்சை ஆதியன எவ்விதம்

அமையவேண்டும் என்பதை நாம் வரையறுக்கவில்லை. அவை வருங்காலத்தில் படிப்படியாக விருத்தியடையவேண்டியவை, அவை குறித்து இப்பொழுது பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்குமேயல்லாமல், ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கமுடியாது. நிற்க, கேம்பிரிட்ஜ், லண்டன் அல்லது சென்னைப் பல்கலைக்கழக முறைகள் சம்பந்தமாக இப்பொழுது பொதுமக்கள் முன்னிலையிலுள்ள உயர்தரக் கல்வித்திட்டம் எதையும் தங்குதடையின்றிப் பின்பற்றலாம். இத்திட்டங்கள் காலத்திற்கேற்ப மாறுபடுந்தன்மையனவாகையால் நமது சூழ்நிலைக்கிணங்க சில மாறுதல்கள் இவைகளில் ஏற்படவேண்டும் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. நிலைமாறும் காலம் நீண்டதாகவோ, பயனற்றதாகவோ இல்லாதிருக்கச் செய்வதே நமது சங்கத்தின் நோக்கம். தற்பொழுது பாடசாலைகளிலும் ஏனைய தொழிற்கல்வி நிலையங்களிலும் சிதறிக்கிடக்கும் சக்திகளை ஒருமுகமாக ஒழுங்குபடுத்தும் ஆரம்ப, உயர்தரப் பாடசாலைகளின் சிகரமாகத் திகழக்கூடியதும் நமது பாடசாலைகளும் கல்லூரிகளும் சக்தியிழந்து சோர்வுற்ற ஒரு முறையிற் செல்லாது தடுத்து மக்களின் பண்பைப் படிப்படியாக உயர்த்திவரக் கூடியதுமான பல்கலைக்கழகத்தை அமைப்பதே நமது சங்கத்தின் நோக்கம்.

'சேர் அருணாசலம் அன்றுமுதல் அவரது அந்திய காலம் வரை தூரதிருஷ்டியற்றவர்களின் சந்தேகங்களால் தடுக்கப்படாதும், பழைய சம்பிரதாயங்களைப் பேணுபவர்களால் புதிய திட்டங்களுக்கேற்படும் தாமதத்தைப் பொருட்படுத்தாதும் தங்குதடையின்றி தான்கொண்ட கொள்கையைத் தொடர்ந்து நிறைவேற்றினாரென நான் கருதுகிறேன். பல்கலைக்கழகத்தை நிறுவினால், அவரது நாட்டின் அரசியல் முன்னேற்றத்திற்கு, அது எவ்வளவுதூரம் அடிகோலும் என்பதைப்பற்றி தீர்க்க தரிசனமான கொள்கையில் ஒரு மனத்துடனும் சலியா உற்சாகத்துடனும் உழைத்தவர் இந்நாட்டில் இவரேயன்றி வேறெவருமிலர். அவர் எவ்வித சிரத்தை காட்டினார் என்பதை வெளிச்சான்றுகளின் மூலமாகக் கல்லூரியிலுள்ள நாம் அறிவோம். முதலாவதும் மிகவும் முக்கியமானதுமான அவரது

சிறந்த நன்கொடை பத்மநாப நூல் நிலையத்தை நமக்களித்த தாகும். அதன் உண்மையான மதிப்பை இன்னும் போதி யளவு தெரிந்துகொள்ளவில்லையென நான் கருதுகிறேன். சேர் குமாரசுவாமி விஞ்ஞானப் பரிசையும் யூனியன் மாணவர் விடுதிக்கு அவரளித்த பெருநன்கொடையையும் நாம் அறி வோம். பல்கலைக்கழகச் சங்கத்தினதும், கலைக்குழுவினதும் அங்கத்தினராக விருந்ததோடல்லாமல், கல்லூரி விவகாரங் களுக்காக அதன் எதிர்கால விருத்தியை நிலை நாட்டப் பொறுப் பேற்றவர்களுக்கு விலைமதிக்கவொண்ணு ஆலோசனைகள் கூறவும், பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்காக உழைக்கவும் அவர் செலவழித்த பொன்னுன நேரத்தையும் சிரமத்தையும் சிந்தனையையும் இவற்ருேடு ஒப்பிடும்பொழுது இவை அவ் வளவு கவனத்திற்குரியவையாகா. இத்துறையில் நான் இவ ரைப்பற்றி மற்றவர்களைவிட நன்கு தெரிந்தே பேசுகிறேன். அவர் அன்னையெனப் போற்றிப் பேணிய இந்நாட்டை அடைந் ததும் எனக்கு அவரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் நமது திட்டத்தின் முழுப் பலனையும்பெற தனது நேரம், சிரமம், சிந்தனை ஆதிய எல்லா வற்றையும் செலவழித்தார் என நான் உறுதியுடன் கூறு கிறேன். விருத்திக்குப் பாதகமான நிலையேற்பட்டபொழு தெல்லாம் இவர் எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற தொடை நடுங்கிகளை வெறுத்துத்தள்ளி புதிய முயற்சிகளுக்கு அளவற்ற ஊக்கம் காட்டிஞர். இக்கல்லூரியின் அதிபர் என்ற முறை யில், அவர் எனக்குக் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் ஊக்கத்துக்கும் அவருக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக் கின்றேன் என்று கூறுவதோ, அவர் மறைந்துவிட்ட செய்தி கேட்டதும் எனக்கு ஏற்பட்ட ஆற்ருெணுத் துயரத்தை வெளி யிடுவதோ இலகுவான காரியமல்ல. அன்பர்களே! அவரு டைய வாழ்க்கை எமக்கு ஒரு உதாரணமாகவும் உணர்ச்சி யூட்டுவதாகவும் விளங்குகின்றது. சமயத்துறையில் அல்லது அரசியற்றுறையில் அவருக்கும் மற்றவர்களுக்குமிடையே எவ் வளவுதான் வித்தியாசமிருந்தாலும் சான்ருேர்களைத் தோற்று விக்கும் சில மனிதப்பண்புகளின் எடுத்துக்காட்டாக அவர் விளங்கிஞர். அப்பண்புகளை நீங்களும் பின்பற்றுவீர் களாஞல் நீங்கள் நன்மை அடைவீர்கள். அவரிடம் காணப்

பெற்ற சிறப்பொழுக்கங்களில், திடசித்தம், சுதந்திர மனப்பான்மை, எண்ணியதைச் செய்துமுடிக்கும் ஏகாக்கிரகசித்தம் ஆதியவற்றை நான் விசேஷமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தமது இலட்சியத்தைப் பெறுவதற்காக அவர் அறப்போர் புரிந்தார். பல்கலைக்கழகத்தை உருவாக்கல் அவரது இலட்சியமாகும். எனினும் சிந்தனைச் சிற்பிகளையும், செயல் வீரர்களையும் பல்கலைக்கழகத்தின் மூலமாகப் பன்னெடுங் காலமாகத் தோற்றுவித்து இந்நாட்டு மக்களின் தரத்தை உயர்த்தவேண்டுமென்பதே அவரது இறுதி இலட்சியமாகும். இதுவே எங்கள் இலட்சியமுமாகும்.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிக் கூறும்பொழுது அவரது சிறந்த பாண்டித்தியத்தையும், கலாஞானத்தையும் குறிப்பிடாது விட்டால் அது பூரணமான வாழ்க்கை வரலாருகாது. அவர் தனது ஓய்வு நேரமுழுவதையும் கலைகளுக்காக அர்ப்பணித்தார். தனது பொறுப்புவாய்ந்த அரசாங்கசேவையின் மத்தியிலும் பண்டைய இலக்கியங்களையும், சரித்திரம், புதைபொருள் ஆராய்ச்சி மேல்நாட்டு, கீழ்நாட்டு தத்துவஞானம் ஆதியவைகளையும் ஆராய்வதில் ஈடுபடத்தவறியதில்லை. அவர் 'இலங்கைச் சரித்திரச் சுருக்கம்' என்ற சிறு நூலை வெளியிட்டார். இந்நூல் அவராற்றிய சொற்பொழிவுகளை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டதோடு, இத்தகைய ஆராய்ச்சிகளில் இலங்கையர் ஈடுபடாத காலத்தில் இது எழுதப்பட்டதால் மிகவும் உபயோகரமான நூலாயிற்று. இலங்கையர் தங்கள் நாட்டின் சரித்திரத்தை அறியாதிருந்ததற்காக அவர்களைச் சேர் அருணாசலம் கடுமையாகக் கண்டித்தார். சிவில் சேவை யாளராகவிருந்த இவர் ஆளுந்திறனும், ஆழ்ந்த கல்வியறிவும் படைத்து விளங்கினார். இத்தகைய திறமைகள்வாய்ந்த ஒருசில ஐரோப்பிய சிவில் சேவையாளர் இவருக்கு முன்னிருந்தபோதிலும், அருணாசலப் பெரியாருக்குப் பின் சேர் போல் ஈ. பீரிஸ் போன்ற திறமையாளர்கள் தோன்றியபோதிலும், இவர்காலத்தில் திறமையாகக் கடமையாற்றிய இலங்கையர் இவர் ஒருவரே யாகையால், திறமையாளர்களின் முன்வரிசையில் இவர் வைக்கப்படுகின்றார். இவர் பண்பாடுநிறைந்த வாழ்க்கை நடத்தினார். இவர் ரோயல் ஆசியச்சங்கத்தின் தலைவராகவிருந்து சேவை

புரிந்ததோடு தமிழ் இலக்கியத்தைப் பற்றியும், இலங்கைச் சரித்திரத்தைப் பற்றியும் பல கட்டுரைகள் வரைந்தார். இந் நாட்டில் மாத்திரமல்ல பிறநாட்டிலும் இவர் கலைவல்லுநராக மதிக்கப்பட்டார். இங்கிலாந்தில் கலை அறிஞர்கள் குழுவில் இவர் பெரிதும் மதிக்கப்பட்டதோடு, மிகவும் அரிய, பெருமை வாய்ந்த பதவியாகிய அத்தீனியன் கிளப்பின் அங்கத்தவர் பதவிக்கும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு சமயம் சேர் பொன்னம்பலம் அருணுசலம் அவர்களைப்பற்றி சேர் அன்ரன் பேட்றம் அவர்கள் இவ்விதம் குறிப்பிட்டார்கள். 'மிகவும் அரிய இலட்சணங்களான அறிவும், சான்ருண்மையும் அவரிடத்தே ஒருங்கே பொதிந்திருப்பது கண்டு பெருமையுறுகிறேன். அவரோடு நெருங்கி உறவாடியவர்கள், உண்மையில் அவரது தாராள மனப்பான்மையையும், தோற்றப் பொலிவையும், வசீரகரமிக்க ஒப்புரவையும் நன்கு அறிவர்'. எட்வர்ட் கார்பென்டர் தனது அருமை நண்பரின் குணுதிசயங்களைப் பற்றிக் கூறுவதாவது: 'மிகக்கடினமானதும் ஆழ்ந்த கருத்துள்ளதுமான பல திறப்பட்ட விஷயங்களை மிக விரைவாகவும் எளிதாகவும் அவர் புரிந்து கிரகித்துக்கொண்ட முறையைக்கண்டு நான் அடிக்கடி வியப்புற நேர்ந்தது. அன்னியருக்கு இரட்டிப்புக்கடினம் என்று சொல்லக்கூடிய விஷயங்களை, உதாரணமாக பிரிட்டிஷ் ஜனப் பிரதிநிதிசபையின் நடைமுறை போன்றவற்றை அவர் விரைவில் கிரகித்த முறை குறிப்பிடத்தக்கது. இக்கிரகிப்பு சுபாவத்தோடு சில சமயங்களில் போலியை எதிர்த்து நின்று கேலி செய்யும் சுபாவமும் அவரிடம் காணப்பட்டது'. களுத்துறை நீதவாஞக அருணுசலம் அவர்கள் கடமை பார்த்த பொழுதுகேர்ணல்ஒல்கொட் அவர்கள் அவரைச் சந்தித்ததைப் பற்றி தனது பழைய தினக்குறிப்பு எனும் நூலில் இவ்விதம் குறிப்பிட்டிருக்கிருர்: 'இன்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிறைஸ்ட் கல்லூரியின் பட்டதாரி ஒருவரைச் சந்தித்தோம். நாம் ஆசியாவில் சந்தித்தவர்களுள் மிகவும் அறிவாற்றலும் நாகரிகமும் வாய்ந்தவர்களில் இவர் ஒருவர்'.

அன்னுர் பல மதக்கருத்துக்களையும், தத்துவஞானக் கொள்கைகளையும் கிரகித்திருந்தபோதிலும் வைதீகசைவரா

கவே விளங்கினார். சேர் அருணாசலம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட 'சமயதத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும்' என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய சேர் சி. பி. இராமசுவாமி ஐயர் கூறுவதாவது: 'தமிழ்த்தத்துவ ஞானக்கருத்துகளையும், இலக்கியங்களையும் முற்றாகவேனும் சிறிதளவாகவேனும், அறியாதவர்களுக்கு சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தமது நூற்றொகுதியில் அவற்றைத் தந்திருப்பதற்கு உலகம் செய்யத்தக்க கைம்மாறும் உண்டுகொல். மிகவும் புராதன தமிழ்ப் புலவர் பெருமக்கள் எளிய, விளக்கமான தமிழ் நடையைப் பின்பற்றியபோதிலும், காலஞ் செல்லச் செல்ல கருத்துக்கள் மிகவும் கடினமான மொழியில் எழுதப்பட்டமையால், அவைகளில் பொதிந்துகிடக்கும் மாண்புமிக்க கருத்துக்களை எடுத்துக் காட்டுபவர் தேவைப்பட்டனர். தேவி வணக்கம், முருகன் வழிபாடு ஆதியனவைகளைப்பற்றிய சில கட்டுரைகளிலும், மாணிக்கவாசகர், தாயுமானவர், மற்றும் குரவர்கள், நக்கீரர் போன்ற பக்தர்கள், புற நானூறு ஆசிரியர் ஆதியோரின் மணிமொழிகள் அடங்கிய மொழிபெயர்ப்புகளிலும் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் முறையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். இச்சிறந்த இலக்கியங்களை மொழிபெயர்த்தல் எவ்வளவு கடினமான வேலையென்பதை அளவிட்டுக்கூறமுடியாது. சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களது மொழிபெயர்ப்புக்கள் மூல நூல்களின் உட்கருத்தையும் அழகையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன எனக்கூறுவதிலும் பார்க்கச் சிறந்த மதிப்புரை வேறில்லை. ஈண்டு இரண்டு உதாரணங்கள் தருகின்றோம்:—

கண்ணிற் காண்பதுன் காட்சிகையாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொடைந்தும் வழுங்குயிர் யாவுமே
யண்ணலே நின்னருள் வடிவாகுமே.

'Whatsoever the eye seeth is Thou. Whatsoever the hand doeth is thy worship. What the mouth uttereth is Thy praise. The earth and other elements and all living things are Thy gracious forms, O Lord'.

நதியுண்டகடலெனச் சமயத்தை யுண்டபர
ஞான வானந்த வொளியே
நாதாந்தரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்—

'Light and Bliss of Knowledge Supreme, that Swallowest religions as ocean rivers. O Stillness, the Vedas' goal!, Thy form seen where vibration ends: O Wisdom consumer of me and thought!'

கீழைத்தேச இலக்கியங்களிலும் ஐரோப்பியப் பண்டைய இலக்கியங்களிலும் நவ இலக்கியங்களிலும் இவருக்கிருந்த ஒப்பற்ற பரிச்சயத்தை வெளிப்படுத்துகின்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வியாசத்தொகுப்பில், 'அறிதுயில்' என்ற விஷயத்தைப்போன்ற பலதரப்பட்ட விஷயங்களைக் கையாண்டுள்ளார். 'அறிதுயில்' என்பது நினைப்பற்ற நிலையெனினும் நித்திரையற்ற நிலையாகும். நினைப்பற நினைத்தல், சும்மா விருத்தல் என்பனவும் இந்நிலையையே குறிக்கும். இவ்வித நிலை பிளேட்டோ, டெனிஸன் ஆகியோரால் குறிப்பிடப்பட்டு இந்திய யோகிகளால் எய்தப்பட்டிருந்தது.

பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல விக்கிரகங்களை விசேஷமாகக் குறிப்பிட்டு அவர் சிவ வழிபாட்டின் தத்துவார்த்தத்தை விளக்கியுள்ளார். 'ஒரு திறனுய்வாளன் முன்கூட்டியே தனது மனச்சாய்வுகளைக் களைந்து அந்த மக்களின் எண்ணத்தை நன்கறிய முயலுவதோடு அவர்கள் எவ்வித நோக்கத்தையுடையவர்களாக உள்ளார்களோ அதே நோக்கத்தைத் தானும் கொண்டிராத பட்சத்தில் ஒரு நாட்டின் கலையைச் சரியாக நிதானிக்கமுடியாது' என்று தமது நூலில் அவர் சுட்டிக் காட்டுகிருர். சாதாரண மனித உருவங்களைப் போலவே தெய்வங்களின் உருவங்களையும் அமைத்தல் நியாயத்துக்கு விரோதமானதென்று வைதிக இந்து மதபோதனை விளக்குகிறதென்று அவர் காட்டியுள்ளார். மேலும் ஆத்மீகக் கண்ணேட்டமே மிகவும் சிறந்ததும் மிகவும் உண்மையானதுமான தரம் என்ற ஆழ்ந்த கருத்தையும் அவர் வெளியிடுகிருர். கிரேக்க கலைக்கும் இந்தியக்கலைக்குமிடையி

லுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டி கிழக்கின் சிற்ப, கட்டட தத்துவார்த்தத்தின் உண்மையான கருத்தை உணர்ந்து கொள்ள அவர் வசதியளித்துள்ளார். இந்த நூலில் சேகரிக்கப்பட்டுள்ள வியாசங்களில் 'கல்விபற்றிய கீழ்நாட்டு இலட்சியங்களும் இக்காலப் பிரச்னைகளில் அவற்றின் செல்வாக்கும்' என்ற சொற்பொழிவு மிகவும் சிறந்ததாகவும் உணர்ச்சியூட்டுவதாகவும் விளங்குகின்றது. இதில் சேர் பொன்னம்பலம் அருணுசலம் அவர்கள் இந்தியாவின் கானக சர்வகலாசாலைகளின் (குருகுலங்களின்) சரித்திரத்தையும் நோக்கத்தையும் விளக்குவதோடு உண்மையான அறிவைப் பெறுவதற்கு அவர்கள் எவ்வித முயற்சி எடுக்கிருர்களென்பதையும் காட்டுகிருர். மேலும் இம்மைக்கும் மறுமைக்குமான கல்வியின் பிரச்னைகளைச் சமாளிப்பதற்குக் கிழக்கிலும் மேற்கிலும் எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கிடையிலுள்ள வித்தியாசத்தையும் அவர் இதில் காட்டியுள்ளார். இந்தப் புத்தகம் 'சமயதத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும்' என்று நாமஞ்சூட்டப்பட்டிருந்தபோதிலும், கிரேக்க, லத்தீன், சமஸ்கிருத, தமிழ் இலக்கியங்களைக் கசடறக் கற்றுணர்ந்த ஒருவரின் ஏராளமான சொந்தக் கருத்துக்களும் அதில் பொதிந்துகிடக்கின்றன. இவர் ஆராய்ந்து வெளியிட்டகட்டுரைகளினதும் சொற்பொழிவுகளினதும் பெருஞ்சிறப்பும் பெறுமதியும், இவர் ஒரு கிணற்றுத் தவளைபோல் இராது ஒரு பிரசித்திபெற்ற நியாயவாதியாகவும் ஆளுத்திறமையுடையவராகவுமிருந்து தமது சொந்த வாழ்க்கையிலேயே இம்மைக்கும் மறுமைக்குமான சாதனைகளை ஒருங்கே ஈட்டியதன் பெறுபேருக இன்னும் பன்மடங்கு தலைசிறந்து விளங்குகின்றன. மிதிலையில் வாழ்ந்த ஜனக மகாராசனைப் போன்று இவர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தார். சேர் பொன்னம்பலம் அருணுசலம் அவர்களையும் அவரைப்போலவே புகழ்பெற்ற அவரின் சகோதரரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களையும் நேரில் அறிந்திருக்கும் பெரும்பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பல அம்சங்களைத் தன்னகத்தே அடக்கிய பண்பாட்டைப் பற்றி அறிந்து கிரகித்துக் கொள்வதால் நற்பயனடையும் ஒரு உலகத்திற்கு இத்தொகுப்பு நூலை அறிமுகப்படுத்தும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது எனது நல்லதிர்ஷ்டமென்றே

கருதுகிறேன். இந்நூலாசிரியர் மேலே காட்டிய பண்பாட்டை விளக்கிக் கூறுபவரும் அந்தப் பண்பாட்டின் உருவாயமைந்தவருமாவர்.

திரு. ஸி. நமசிவாயம், திரு. என். இரத்தினசபாபதி, திரு. (இப்பொழுது இராசவாசல் முதலியார்) ஸி. தியாகராஜா ஆகியோரின் உதவியுடன் அருணசலம் அவர்கள், இந்து மதக் கல்வியையும் அனுட்டானத்தையும் ஊக்குவித்த, கொழும்பு சைவ பரிபாலனசபை யென்றழைக்கப்பட்ட இந்துமத ஸ்தாபனத்தை இலங்கைச் சைவபரிபாலனசபையெனப் புனருத்தாரணஞ் செய்தார். இச்சபையின் முதலாவது தலைவரும் இவரே. பல வழிகளில் அவர் கதிர்காம க்ஷேத்திரத்தையும் அதற்குரிய காணிகளையும் பாதுகாப்பதில் உதவி புரிந்தார். தம்மை அறிந்த எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூரைச் சேர்ந்த இலக்கணம் இராமசாமிப்பிள்ளை என்னும் ஸ்ரீலஸ்ரீ அருள் பரானந்த தேசிகர் அவர்களைத் தமது ஞானசிரியராகப் பெறும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. இவர் தமது சிநேகிதரான எட்வேர்ட் காப்பென்டர் என்பவரை இந்த ஞானிக்கு அறிமுகம் செய்துவைத்தார். எனவே இவர்கள் மூவரும் ஆத்மீக விஷயங்களைப்பற்றி விவாதிப்பதற்கு அருணசலம் அவர்கள் பெரிய கோட்டு நீதவானகவிருந்த குருநாகலில் அடிக்கடி சந்தித்தார்கள்.

1883-ஆம் ஆண்டில் அருணசலம் அவர்கள் மானிப்பாயைச் சேர்ந்த நமசிவாயம் முதலியார் அவர்களின் செல்வப் புதல்வியாரான சொர்ணம் என்பாரைத் திருமணஞ் செய்தார். அவர்களுக்குப் புதல்வர் மூவரும் புதல்விகள் ஐவருமாக எட்டுக் குழந்தைகள் பிறந்தன. மூத்தப் பிள்ளையான பத்மநாபன் என்பார் தம் தகப்பனர் இறப்பதற்குமுன்பே காலமானர். இளைய புதல்வரான இராமநாதன் 1939-ஆம் ஆண்டில் காலமானர். உயிர்வாழும் ஒரேயொரு புத்திரர்தான் சேர் அருணசலம் மகாதேவா. இவர் இலங்கையின் தலைவர்களுள் ஒருவரும் அரசியல் ஞானியுமாவார். சேர் அருணசலம் அவர்

களின் புதல்விகளுள் இருவரான ஸ்ரீமதி மகேஸ்வரி செகராஜ சிங்கமும், ஸ்ரீமதி மனோன்மணி, ஸ்ரீ பத்மநாதனும் அவர் இறப்பதற்குமுன்பே காலஞ்சென்று விட்டார்கள். ஸ்ரீமதி பத்மாவதி பரராஜசிங்கம், ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா, ஸ்ரீமதி சுந்தரி நடராஜா ஆகியோர் மட்டுமே இப்பொழுது உயிருடன் இருக்கிறார்கள். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையான லேடி அருணாசலம் அவர்கள் 1940-ஆம் ஆண்டு விண்ணுலகேகினார்கள்.

கேர்ணல் வெட்ஜ்வூட் அவர்கள் மக்கள் முன்னிலையில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதற்காக 1921-ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் இலங்கைத் தேசியக் காங்கிரஸின் ஆதரவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் சேர் பொன்னம்பலம் அவர்கள் காங்கிரஸ் மேடையில் கடைசியாகச் சமுகமளித்து அக்கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். இதை அடுத்து1921-ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 15-ஆம் தேதி 'தற்போதைய அரசியல் நிலைமை' என்னும் பொருள்பற்றி அவர் ஒரு கூட்டத்தில் பேசினார். இங்கு அவர் பின்வருமாறு கூறினார் :—'இப்பொழுது நான் இலங்கைத் தேசீய காங்கிரஸின் தலைமைப் பதவியில் இல்லாதிருப்பதால் என்னால் அதிக சுதந்திரத்துடன் பேச முடிகிறது. அரசியல் சீர்திருத்த இயக்கத்தை ஸ்தாபிப்பதற்கும், பொதுமக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டுதற்கும், மிதவாதிகள், பழைமையைப்பேணுவோர், தீவிரவாதிகள் ஆகிய எல்லாச் சக்திகளையும் ஒன்று கூட்டுதற்கும், எமது அரசியற் திட்டத்தில் ஒரு நியாயமான சீர்திருத்தத்துக்கான ஆகக் குறைந்த கோரிக்கையின் பேரில் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்குமென 1916-ஆம் ஆண்டில் நான் மேற்கொண்ட கடமையை முடித்துவிட்டு கடந்த ஒக்டோபர் மாதம்தான் அப்பதவியைத் துறந்தேன். அப்படிச் செய்தபின் மக்களுக்கும், சீர்திருத்தத்துக்கும் உத்தியோகப்பற்றுக்களின்றி தனிப்பட்டவனென்ற முறையில் மிகவும் திறமையாக வேலைசெய்ய முடியுமென்பதை நான் உணர்ந்தேன்'. விஷயங்களைச் சமர்ப்பிப்பதில் காங்கிரஸிலுள்ள சிங்கள அங்கத்தவர்களுக்கும் தமிழ் அங்கத்தவர்களுக்குமிடையில் ஒரு அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இது அவருக்கும் காங்கிரஸுக்குமிடையில் ஒரு

பிளவை ஏற்படுத்தியது. ஆனல் அதை அவர் சிறிதள வேனும் பொருட்படுத்தவில்லே. தமிழ் மக்களின் அபிப்பி ராயத்தைச் சரியான வழிகளில் ஸ்தாபிப்பதற்கும் கூடுமானல் அதற்கு வழிகாட்டுவதற்கும் 1923-ஆம் ஆண்டில் சேர் பொன் னம்பலம் இலங்கைத் தமிழர் சபையை ஸ்தாபித்தார். இந்த ஸ்தாபனம் பிரதானமாக இலங்கையிலும் தென்னிந்தியா விலும் தமிழர் குடியேறியுள்ள நாடுகளிலுமுள்ள தமிழ் நட வடிக்கைகளேக் கொண்ட ஒரு கலாசார ஸ்தாபனமாக இருக்க வேண்டுமென்பதே அவரது விருப்பம். தமிழர் சபையின் கலாசார நடவடிக்கைகளே அபிவிருத்தி செய்வதற்கும், அதே நேரத்தில் அவர் மனப்பூர்வமாக விரும்பிய சிங்களர்களுடன் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அவர் அவ்வளவு காலம் உயிர்வாழவில்லே.

1923-ஆம் ஆண்டின் கடைசியில் அவர் இந்தியாவிலுள்ள புனிதஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தார். அங்கு ஒரு ஆழ்ந்த மதப்பற்றுள்ளவருக்கான தகுந்த சூழ்நிலேயில் அவ ரது வாழ்க்கையின் இறுதிச்சம்பவம் நிகழ்ந்தது. செல்வங் கள் எல்லாவற்றிலும் விலே மதிக்கவொண்ணுத செல்வமான, தமது நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் சேவை செய்வதில் செலவுசெய்யப்பட்ட ஒரு புனித வாழ்கையின் ஞாபகத்தை விட்டு விட்டு 1924-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 9-ஆம் தேதி தமது தெய்வ வழிபாடுகளின் மத்தியில் மதுரையம்பதியில் இறைவன் திருவடிநீழலே எய்தினர். அவரது மறைவு அபிப் பிராய பேதங்களின் கூக்குரலே ஓயச்செய்தது. நண்பர்களேப் போலவே அரசியல் விரோதிகளும் கூட, மறைந்த நங்கள் தலேவருக்கு இறுதி மரியாதை செய்வதில் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு முன்வந்தனர். இவரது மறைவு ஈடு செய்ய முடியாத தொன்றுகும். துக்க சாகரத்தில் மூழ்கிய ஜனசமுத்திர முன்னிலேயில் கொழும்பு பொதுமயானத்தில் அவரது ஈமக்கிரியைகள் நிறைவேறின.

இவர் காலகதியடைந்தவுடன் இவரது ஞாபகார்த்தத்தை என்றும் நிலேநாட்ட சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் தலேமை யில் அருணுசலம் சிலேக்கமிட்டியென ஒரு கமிட்டி ஆரம்பிக்கப் பட்டது. 1930-ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம், 3-ஆம் தேதியன்று அரசாங்கசபை மைதானத்தில் இவரது வெண்கல உருவச்சிலே யொன்று தேசாதிபதியவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இச்சிலையின் கீழ் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது :—

நிரம்பிய கல்விப்புலமையும் அரசியல்
வன்மையும், ஆளுந்திறனும்வாய்ந்த
ஸ்ரீமான் சேர் பொன்னம்பலம் அருணசலம்
1853–1924
தேச சேவைக்கென்றே தந்நாட்களை
அர்ப்பணஞ்செய்த பெருந்தகையாளர்—
சட்ட மன்றத் திருத்தத்தினை அரிதின் முயன்று
முற்றுவித்த வீரர்—இலங்கையிற் சர்வகலா
சங்கம் அமைப்பதற்காய் அருந்தவம் ஆற்றித்
தளராதுழைத்த பெருமகன்,
இவரது நன்றிகளை மறவா இலங்கை
வாசிகளால் நிறுவிய நடுகல்.

சேர் அருணசலம் அவர்களின் உருவப் படங்கள் அவரது பழைய பாடசாலையான றோயல் கல்லூரியிலும் இலங்கைச் சமூகசேவைச் சங்கம், இலங்கைத் தேசீய காங்கிரஸ் முதலியவற்றின் காரியாலயங்களிலும் திறந்து வைக்கப்பட்டன. இலங்கைச் சர்வகலாசாலையின் விடுதிமண்டபங்களில் ஒன்றிற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. அருணசலம் அவர்களின் நன்கொடைகளுள் இலங்கைச் சர்வகலாசாலைக்கு அவரால் வழங்கப்பட்ட பெறுமதியான நன்கொடைகளும் இருக்கின்றன.

இவர் பல துறைகளில் ஈடுபட்டுழைத்த உத்தமர். பிரசித்திபெற்ற இவரது கீர்த்திப்பிரதாபம் காலஞ்செல்லச் செல்ல சரித்திர ஏடுகளில் மேன் மேலும் பிரகாசிக்கும். இவர் கடமையுணர்ச்சிமிக்குடையவர். மானம், மரியாதையைப் பேணி நடப்பவர். ஒரு அரசியல் ஞானிக்குத் தேவையான எல்லாக் குணதிசயங்களும் இவரிடத்தில் காணப்பட்டன.



பாராளுமன்ற முன்றிலில் நிறுவப்
பட்டுள்ள அருணாசலம்
அவர்களின் உருவச்சிலை



வில்லியம் ரொதென்ஸ்டீன் என்ற பிரபல ஓவியர் தீட்டிய
சேர் அருணாசலத்தின் சித்திரம்

இவர் குறிப்பிடத்தக்க தூரதிருஷ்டியுடையவராக விளங்கினர். 'தூரதிருஷ்டி இல்லாத இடத்தில் மக்கள் அழிந்து போவார்கள்', என்று தீர்க்கதரிசி சொலமன் கூறியதைப்போல் இவரும் அடிக்கடி கூறிவந்துள்ளார். தைரியம் அவர் நெஞ்சில் குடி கொண்டிருந்தது. அசையாத நம்பிக்கையும் அவரிடத்தில் காணப்பட்டது. அவருடைய உற்சாகம் அவரைச் சாரும் எல்லோரிடத்தும் பரவுந்தன்மையதாக விருந்தது. நாட்டின் பல்வேறு சக்திகளையும் அவர் ஒருமுகப்படுத்தினர். மேலும் தமது தனித்தன்மையால் அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து பொதுசனசேவை உணர்ச்சியையும் தேசாபிமான ஓர்மையையும் அச்சக்திகளிடத்திற் புகுத்தினர். இந்நாட்டின் ஆண், பெண் ஒவ்வொருவர் மனதிலும் என்றும் அழியாத ஒரு தேசிய உணர்ச்சியைத் தூண்டியுள்ளார்.

சேர் பொன்னம்பலம் அருணசலம் அவர்களின் வாழ்க்கையை நாம் தனியாக எடுத்துக் கொள்வோமானல் திடசித்தம், தெளிவான தூரதிருஷ்டி, ஒழுக்கம், உழைப்பு, திறமை முதலிய எல்லாக்குண நலன்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் உத்தம புருடரைக் காண்போம். இவர் தம் காலத்திலிருந்த அறிஞர்கள் எல்லோரிலும் தலைசிறந்து விளங்கியதோடு இலங்கையின் பிற்கால சந்ததிகளுக்கும் ஒரு முன்மாதிரியாகவும், உற்சாகமூட்டும் ஒரு சக்தியாகவும் இன்னும் இருந்து வருகிறர். இலங்கையின் முன்னேற்றத்துக்கான பல்வேறு மூல காரணங்களைக் கண்டுபிடிக்க இலங்கையர் முயலும்போதெல்லாம், இலங்கை மறுமலர்ச்சியின் பிதாவான சேர் பொன்னம்பலம் அருணசலம் அவர்களின் பெயரே முதற்கண் தென்படும். இவருடைய நண்பரும் இவரது காலத்தில் வாழ்ந்தவருமான சேர் ஜேம்ஸ் பீரிஸ் இவரைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறர் :—' இவர் இத்தீவின் அரசியல் புனருத்தாரணத்துக்கும் மக்களின் சமூக முன்னேற்றத்துக்கும் முற்காலத்திலோ சமீபகாலங்களிலோ வாழ்ந்த எவரையும்விட அதிக சேவை செய்துள்ளார்'.

## சேர் பொன். அருணாசலம் அவர்கள்

# நூற்பட்டியல்

---


1901-ஆம் ஆண்டு, இலங்கைக் குடிசன மதிப்பு சூசிகை—கொழும்பு, 1901.

1901-ஆம் ஆண்டு, இலங்கைக் குடிசன மதிப்பு, தொகுதி 1-4—கொழும்பு, 1902.

அறிதுயில்—வெஸ்ற்மினிஸ்ரர் ரிவியூ—லண்டன், நவம்பர், 1902.

இலங்கைச் சரித்திரச் சுருக்கம்—இலங்கைத் தேசீய சஞ்சிகை. தொகுதி 1—1906. இது பின்னர் ஒரு தனி நூலாகப் பிரசுரிக்கப்பட்டது. இந்நூலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு கையெழுத்துப் பிரதியாக இவரது கட்டுரைகளோடு காணப்பட்டது.

இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகத்தின் அத்தியாவசியம்.—இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கச் சஞ்சிகை, தொகுதி 1, பகுதி 2—1906.

இலங்கைச் சிவில் சட்டமஞ்சரி—லண்டன், 1910. ஆதிப்பொல செப்பேடு வழக்கில் அருணாசலம் கூறிய தீர்ப்பு இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்கள் அரசியல் தேவைகள்—கொழும்பு, 1917.

இக்கால அரசியல் நிலைமை—கொழும்பு, 1919.

தலைமையுரையும் வேறு அரசியற் சொற்பொழிவுகளும், இலங்கைத் தேசீய காங்கிரஸ் கைநூல், 1918-1928, கொழும்பு, 1928.

ரோயல் ஆசியச் சங்கத்து இலங்கைக் கிளைச் சங்கச் சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரைகள்:
- ஞானவாசிட்டம், தொகுதி xxii, இல. 63—1910.
- கண்டி மாகாணங்கள், தொகுதி xxii, இல. 63—1910.
- பொலநறுவை வெண்கல உருவங்களும் சிவவழிபாடும், தொகுதி xxiv, இல. 68—1916-16.
- முருக வழிபாடு (கதிர்காமக் கடவுள்), தொகுதி xxix, இல. 77—1924.
- ரோயல் ஆசியச் சங்கத் தலைமைப் பேருரை, xxiii, இல. 67—1904.

கொழும்பு பொருட்காட்சிச் சாலையிலுள்ள புராதன வெண்கல உருவங்கள்—ஸ்பொலியா சிலோனிக்க சஞ்சிகை, தொகுதி vi, பகுதி xxii—கொழும்பு, 1909.

கிழக்குத்திக்கின் ஜோதி—எட்வேட் காப்பென்டர் பதிப்பு—லண்டன், 1928. (சேர் அருணாசலம் காப்பென்டருக்கு எழுதிய கடிதங்கள்).

சேர் பொன். அருணாசலந்துரை அவர்களின் சீவிய சரித்திரச் சுருக்கம். நவாலியூர் சோமசுந்தரப் புலவர்—1928.

ஸ்ரீ அருணாசல மான்மியம், வித்துவான் ச. பொன்னம்பல பிள்ளை—கொழும்பு, 1934.

சேர் பொன்னம்பலம் அருணாசலம், சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்—கொழும்பு, 1936.

சமயதத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மொழிபெயர்ப்பும்—சேர் பொன்னம்பலம் அருணாசலம்—கொழும்பு, 1937.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
VANMIYUR, MADRAS